வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 01 27.11.2021 சனிக்கிழமை இதழ் : 357 பக்கங்கள் : 16

# இன்று மாவீரர் நாள்

## பாதுகாப்பு கெடுபிடிகளுக்குள்ளும் நினைவேந்த மக்கள் தீவிர ஆர்வம்!

யாழ்ப்பாணம், நவம்பர் 27

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடி மடிந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவுகூரும் நாள் இன்றாகும். தமக்காகக் களமாடி வீழ்ந்த - தமது சொந்தங்களை நினைவுகூருவதற்கு தமிழ் மக்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

15

*நினைவேந்தலுக்கு தடை*

## பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்தது முல்லை. நீதிமன்று

முல்லைத்தீவு, நவ. 27

மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி முல்லைத்தீவு பொலிஸ் நிலையங்கள் மீண்டும் செய்த விண்ணப்பங்களை நிராகரித்தது முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம்.

மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று தடை உத்தரவு வழங்கியது. ஆனால், அந்த உத்தரவின்மீதான நகர்த்தல்

15

*தீருவிலில் மாவீரர் நாள்*

## நினைவேந்தலுக்கு தடை விதிக்க பருத்தித்துறை நீதிமன்றம் மறுப்பு

வடமராட்சி, நவ. 27

வடமராட்சி - வல்வெட்டித்துறை - தீருவிலில் மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கு தடை கோரிய பொலிஸாரின் மனுவை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தீருவிலில் நினைவேந்தலை நடத்த வல்வெட்டித்துறை நகர சபை அனுமதி மறுத்த நிலையில், மீண்டும் ஆராய்ந்து அனு மதி வழங்கப்பட்டது.

15

## மத தலங்களில் வழிபடலாம்

*தடையை நீக்க கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று மறுப்பு!*

கிளிநொச்சி, நவ. 27

“வணக்க ஸ்தலங்களில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தத் தடையும் இல்லை.” என்று தெரிவித்துள்ள கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம், மாவீரர்களை நினை வேந்த விதிக்கப்பட்ட

15

*மாவீரர் நாள் நினைவுகூரலுக்கு*

## தடை உத்தரவு பிறப்பிக்க மன்னார் நீதிமன்றும் மறுப்பு

மன்னார், நவ. 27

மன்னார் மாவட்டத்தில் மாவீரர்களை நினைவுகூருவதற்கு தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் செய்த விண்ணப்பத்தை மன்னார் நீதிவான் நீதிமன்றமும் நிராகரித்துள்ளது.

இன்றைய தினம் மாவீரர்

15

## யாழ். பல்கலைக்கழகத்தில் பிரபாகரனின் பிறந்தநாள்!



யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 67ஆவது பிறந்த நாள் யாழ். பல்கலைக்கழகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 67ஆவது பிறந்த நாள் நேற்றாகும். அவரின் பிறந்த

15

## “நேதாஜி என்றும் சிரஞ்சீவியாக வாழ்வார்”

## வீரத்தமிழனின் பிறந்தநாளில் காந்திஜியின் வாசகங்களை அவருக்கு சமர்ப்பிக்கிறேன்

*பாராளுமன்றில் விக்னேஸ்வரன் எம். பி.*



கொழும்பு, நவ. 27

“நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார் என்று காந்தியவர்கள் கூறினார்கள். மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு - கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய (நேற்று) பிறந்த நாளன்று அவர் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கின்றேன்.”, என்று பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

15

*கேக் படம் அனுப்பியதற்காக*

## தமிழ்த் தாதிய மாணவன்மீது கடற்படை மாணவன் தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 27

தனது கைபேசி இலக்கத்துக்கு கேக் படத்தை அனுப்பிய தமிழ் தாதிய மாணவரை கடற்படை தாதிய மாணவன் சரமாரியாக தாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின்

15

## இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள்

*பாராளுமன்றில் சித்தார்த்தன் கோரிக்கை*

கொழும்பு, நவ. 27

1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை

15

*மனித உரிமைகள் மீறலால்*

## பொலிஸாருக்கான பயிற்சியை நிறுத்துகின்றது ஸ்கொட்லாந்து!

லண்டன், நவ. 27

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் மீறல்கள் காரணமாக பல வருடங்களாக பொலிஸாருக்கு அளித்த பயிற்சியை நிறுத்த ஸ்கொட்லாந்து பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் பி. பி. சி. வெளி யிட்ட செய்தியின்படி, ஸ்கொட்லாந்து

15



## வீரத்தமிழனின்...

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான க. வி. விக்னேஸ்வரன் நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரின் உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

போர் முடிந்த பின்னரும் வருடா வருடம் படையினருக்கு கூடிய நிதிகளை பாதீட்டில் ஒதுக்கிவருவது எதற்காக? மாலைதீவோ இந்தியாவோ எமக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ள மாட்டா. நீங்கள் இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனமக் களுக்கு எதிராகத்தான் படையினரைப் பாவிக்கப் போகின்றீர்கள். மக்கள் உங் களை வெறுக்கத் தொடங்க மேலும் மேலும் இராணுவ பலத்தைப் பாவிப்ப தற்காகவா இத்தனை பெரும் தொகையை படையினர் சார்பில் செலவிடுகின்றீர்கள் என்றும் கேட்டார்.

இந்தத் தொகைகளில் ஒரு பகுதியை யாவது எங்கள் பிறநாட்டுக் கடன்களை அடைக்கப் பாவிக்கலாம் என்று உங்க ளுக்குத் தோன்றவில்லையா?, ரூபாய் 30 ஆயிரத்து 800 கோடி ரூபாயை ஒரு சிறிய நாடான இலங்கை பாதுகாப்புக்கு பாவிக்க முனைவது வியப்பை அளிக்கின்றது. அண்மையில் அரசாங்க ஊழியர்கள் எமது நிதியில் பெரும் பங்கை எடுத்து விடுகின்றார்கள் என்று நிதி அமைச்சர் கூறியிருந்தார். இது தவறு. படையினர்தான் எமது வருமானத்தில் கூடிய பங்கை விழுங்கி வருகின்றார்கள்.

பாதீட்டால் வட, கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்க வில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் குறை தீர்க்க எந்த ஒரு திட்ட மும் வகுக்கப்படவில்லை. நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட வேண்டுமானால் 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறித் திரிந்தால் அது ஏற்படாது. சுய நிர்ணய உரிமைக்கு உரியவர்களுக்கு சமஷ்டி முறையிலான ஓர் அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர் களையும் சமமான முறையில் வரவேற் றால்தான் சமாதானமும் சுபீட்சமும் உதயமாகும் என்பதை மறக்காதீர்கள்.

என் பேச்சை முடிக்க முன் உறுப்பி னர்களுக்கு ஒரு விடயத்தை நான் நினைவுபடுத்த வேண்டும். இந்த வாரம் வட, கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய வாரம். வீரமரணம் அடைந்த மாவீரரை நினைவுறுத்தும் வாரம். அதுவும் இன்றைய தினம் இவ்வாரத்தினுள் அதிவிசேட தினம்.

இந்தத் தருணத்தில் பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய சுபாஷ் சந்திர போஸ் பற்றி அஹிம்சாவாதியான மகாத்மா காந்தி அவர்கள் கூறிய வாச கங்கள் சிலவற்றை உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகின்றேன்.

'நேதாஜியின் தேசப்பற்று எவர்க்கும் குறைந்ததல்ல. அவரின் வீரம் அவரின் சகல காரியங்களிலும் பளிச்செனப் பிரதிபலிக்கின்றன. அவர் உன்னத குறிக் கோள்களை முன்வைத்தார். ஆனால், தோல்வியுற்றார். ஆனால், யார் தான் தோல்வியைத் தழுவாதவர்கள்?'

இன்னொரு சந்தர்ப்பத்தில் காந்தி யவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "இந்தியாவிற்கு ஆற்றிய அவரின் சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென் றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்!" அகிம்சையின் பால் ஈர்க்கப் பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு - கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய (நேற்றைய) பிறந்தநாள் அன்று அவர் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கின்றேன் - என்றார்.

## தமிழ்த்...

தாதிய பயிற்சி கல்லூரியிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

தாதிய பயிற்சி கல்லூரியில் கடற் படையை சேர்ந்த மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இவ்வாறு பயிற்சி பெறும் கடற்படை மாணவர் ஒருவர், லண்டனில் தமிழர்களை நோக்கி கழுத்தை வெட்டுவேன் என்று சமிக்ஞை காட்டிய இராணுவ அதிகாரியின் படத்தை கடந்த மே 19ஆம் திகதி அனுப் பியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இது தமிழ் மாணவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், நேற்றைய தினம் பிறந்தநாள் கேக் வெட்டும் படம் ஒன்றை தமிழ் மாணவர் ஒருவர் குறித்த கடற்படை மாணவனின் கைபேசி இலக் கத்திற்கு அனுப்பினார் என்று கூறப்படு கின்றது. இதனால், ஆத்திரமடைந்த கடற்படை மாணவன் படம் அனுப்பிய தமிழ் மாணவனை கடுமையாக தாக்கி யுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், கல்லூரி நிர்வா கத்துக்கு அறிவித்தபோதும் நடவடிக்கை எடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்து விட்ட னர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## இலங்கைக...

உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச நாடுகளு டன் பல உடன்படிக்கைகள் கைச்சாத் திடப்பட்டுள்ளன. இதில் 1987ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் மிக முக்கியம்.

எந்த அரசாங்கம் அமைந்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த ஒப்பந்தம் கிழித்தெறி யப்படக்கூடாது. இவ்வாறு இன்னும் நடக்கவில்லை. நடந்தால் அது நாட்டுக்கு உகந்த விடயமாக இருக் காது", என்றும் எச்சரித்தார். (ஐ)

## தடை...

களை நினைவுகூர பாராளுமன்ற உறுப் பினர்கள் உட்பட 6 பேருக்கு தடை விதிக்குமாறு கோரி மன்னார் பொலி ஸார் நேற்று மன்னார் நீதிவான் நீதி மன்றில் விண்ணப்பித்தனர்.

தமக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் நாளைய தினம் (இன்று) மன்னாரில் மாவீரர் தினம் அனுஷ்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களான செல் வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மல நாதன், மன்னார் நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், உப தவிசாளர் எஸ். ஜாட்சன், நகர சபை உறுப்பினர் எஸ். ஆர். குமரேஸ் மற்றும் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்க தலை வர் வி. எஸ். சிவகரன் ஆகிய 6 பேருக்கும் மாவீரர்களை அனுஷ்டிக்க தடை விதிக்க வேண்டும் என்று பொலிஸார் அந்த விண்ணப்பத்தில் கோரியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான், போதிய சாட்சிகள் மன்றில் சமர்ப்பிக்கப்படா மையால் அந்த விண்ணப்பத்தை நிரா கரித்தார். (ஐ)

## பொலிஸாரின்...

பத்திரத்தை ஏற்று விசாரித்த நீதிவான் ரி. சரவணராஜா தனது தீர்ப்பில், "இறந்தவர் களுக்கு பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ள முடியும் இறந்தவர்கள் அவர் யாராக இருந்தாலும் அவரை நினைவு கூருவது மானிடப்பண்பு", என்று குறிப்பிட்டு தடை உத்தரவில் திருத்தங்களை செய்தது.

இந்த நிலையில், மாவட்டத்தின் 7 பொலிஸ் நிலையங்களும் நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்து நினைவு கூரலுக்கு தடை உத்தரவு வழங்குமாறு விண்ணப்பித்தனர்.

இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களை யும் கேட்ட நீதிவான் ரி. சரவண ராஜா பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராக ரித்து, முன்னர் (நேற்றுமுன்தினம்) வழங் கிய கட்டளையையே வழங்கினார். (ஐ)

# கொரோனா தொற்றால் மேலும் 26 பேர் மரணம்

கொழும்பு, நவ. 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 26 பேர் உயிரிழந் துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 258 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப் பட்ட 26 மரணங்களில் 10 பெண்களும், 16 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## சிறிதரனின் உரை; ஆளுநர் அலுவலகம் பதில்

யாழ்ப்பாணம், நவ. 27,

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் எஸ்.சிறிதரன் தெரியப் படுத்திய காணி விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்திருக் கின்றது.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது யாழ். மாவட்ட எம்.பி. சிறிதரன், வடமாகாண ஆளுநருடன் தொடர்புகொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து அனுப்பிவைத்துள்ள பதிலிலேயே, காணி விடயம் தொடர் பாக ஆளுநர் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதாக அவரது அலுவலகம் தெரிவித்திருக்கின்றது.

## யாழ்...

நாளை கொண்டாடும் முகமாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அவரின் உருவப்படத்தை வைத்து கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக சூழலில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்ட நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் கேக் வெட்டி கொண்டாப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நினைவேந்த...

இதையடுத்து, இதனை எதிர்த்தும் - அனுமதி வழங்கக்கூடாது என்று கட்டளை வழங்குமாறு கோரியும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பித்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் " தடை செய்யப்பட்ட இயக்கத்தை அடையா ளப்படுத்தும் வகையிலான செயல்பாடு களை முன்னெடுக்க முடியாதே அன்றி, இறந்தவர்களை நினைவுகூருவதை தடுக்க முடியாது", என்று கூறி பொலிஸாரின் விண் ணப்பத்தை தள்ளுபடி செய்தார். (ஐ-2)

## பொலிஸாரு...

பொலிஸாரால் இலங்கைக்கு வழங் கப்படும் பயிற்சி தொடர்பில் புதுப்பிக்க வேண்டிய உடன்படிக்கை கடந்த மார்ச் மாதம் காலாவதியானது. இந்த நிலை யில் அதனை தொடர்ந்தும் நீடிக்கும் எண்ணமில்லை என்றும் ஸ்கொட்லாந்து பொலிஸ் திணைக்கள பிரதானி இயன் லிவிங்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் புதுப்பிக்கப்பட மாட்டாது என அறிவுறுத்துமாறு கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டின் முதல் பாதியிலி ருந்து இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை மோசமடைந்து வருகிறது என்று ஸ்கொட்லாந்து வெளிவிவகார அலுவலகம் அண்மையில் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டது. அத்துடன், படைத் தரப்புகளால் பல தான்தோன்றித்தனமான கைதுகள் மேற்கொள்ளப்பட்டன, பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி மனித உரிமை ஆர்வலர்கள் அச்சுறுத்துப்படும் நிலை அதிகரித்துள்ளது என்றும் கூறப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பி. பி. சி. ஸ்கொட் லாந்து காவல்துறை திணைக்கள பிரதா னியிடம் வினவியபோது, "உலகம் முழு வதும் காவல்துறையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் நாங்கள் உண் மையிலேயே கடமைப்பட்டுள்ளோம், இதன் மூலம் மனித உரிமைகளை மேம் படுத்தவும் செயல்படுத்தவுமே நாம் முயற்சிக்கிறோம் - என்றார். (ஐ)

## பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, நவ. 27

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.நத்தார் பண்டிகையை முன்னிட்டு இந்த விடுமுறை வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது. (அ)

## இன்று...

இந்த நிலையில், மாவீரரை நினைவு கூருவதைத் தடுக்கும் விதத்தில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங் களில் இராணுவ பிரசன்னம் அதிகரிக் கப்பட்டுள்ளது. குறிப்பாக, மாவீரர் துயி லும் இல்லங்கள், மாவீரர்களின் நினைவுத் தூபிகள், நினைவு இடங்கள் மற்றும் பிரசித்தி பெற்ற வழிபாட்டு தலங்களி லும், நகர மையப் பகுதிகள் மற்றும் முக்கிய இடங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக் கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், நீதிமன்றங்கள் மாவீரர் களை நினைவுகூருவதற்கு விதித்த தடைக ளில் திருத்தங்களை செய்தமையால் சட்ட விதிகளுக்கு அமைவாக - புலிகள் அமைப்பின் கொடிகள், அடையாளங் கள் இன்றியும் சுகாதார விதிகளை பின் பற்றியும் நினைவுகூரலை நடத்தவும், கூட்டுப் பிரார்த்தனைகளில், வழிபாடு களில் ஈடுபடவும் மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த நிலையில், மாவீரர்களை நினைவேந்துவதை தடுக்கும் விதமாக பொலிஸார் நேற்று விண்ணப்பங்க ளையும், நகர்த்தல் பத்திரங்களையும் நீதிமன்றங்களில் சமர்ப்பித்தனர். எனி னும், அவற்றை நீதிமன்றங்கள் நிராக ரித்து விட்டன. (ஐ)

## இன்று...

தடை உத்தரவுக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

மாவீரர் நாளை நினைவேந்த கிளி நொச்சி மாவட்டத்தில் 51 பேருக்கு எதி ராக 8 பொலிஸ் நிலையங்களின் விண்ணப் பத்தை ஏற்று கிளிநொச்சி நீதிவான் நீதி மன்றம் தடை உத்தரவுகளை பிறப்பித்தது.

இந்தத் தடை உத்தரவுகளை மீளப் பரிசீலிக்குமாறு நேற்று நகர்த்தல் பத் திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்மீதான விசாரணை நேற்று சுமார் 3 மணி நேரம் இடம்பெற்றது.

விசாரணை முடிவில், இரு தரப்பு வாத பிரதிவாதங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டளை சட்டத்துக்கு அமைவாக தடை உத்தரவு வழங்கப்பட் டுள்ளது. இதை இரத்து செய்யவோ அல் லது மாற்றியமைக்கவோ வேண்டிய தேவை இருப்பதாகக் கருதவில்லை. மத அனுஷ்டானங்களில் ஈடுபடவும், வணக்க ஸ்தலங்களில் மேற்கொள்ளவும் எந்தத் தடையும் இல்லை என்று கூறினார்.

# சீரற்ற வானிலையால் யாழில் 758 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

சீரற்ற வானிலையால் 216 குடும்பங்களை சேர்ந்த 758 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நேற்று முன்தினம் முதல் பெய்தமழை மற்றும் அதிக காற்று காரணமாக 216 குடும்பங்களைச் சேர்ந்த 758 நபர்கள் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன், காரைநகரில் இரண்டு குடும்பத்தை சேர்ந்த 8 பேர் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, காரைநகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் அனர்த்த முகாமை பிரிவினர் நேரடி களப் பயணத்தை மேற் கொண்டு நேரடி ஆய்வில் ஈடுபட்டனர். (ஐ)

# 'யாவர்க்கும் நலம்' கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடத்தும் 'யாவர்க்கும் நலம்' எனும் மெய்நிகர் வழி கருத்தமர்வு இன்று சனிக்கிழமை இரவு மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறவுள்ளது.

பிரபல மருத்துவ நிபுணர்களால் பிரதி சனிக்கிழமைகளில் நடத்தப்படும் இந்தக் கருத்தமர்வில், இன்றைய தினம் 'பாலியல் ஆரோக்கியமும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும்' எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தமர்வில் 'சூம்' செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்ரன் ராஜரட்ணம் பிரான்சிஸ்கா (தங்கம்)



**தோற்றம்: 02 - 02 -1942** **மறைவு: 22. 11.2021**

*நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருள்வார். (2 தீமே 4:8)*

ஊர்காவற்றுறை கொத்திகுளம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Colombes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் ராஜரட்ணம் பிரான்சிஸ்கா அவர்கள் 22.11.2021 திங்கட்கிழமை அன்று பிரான்ஸில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோணி - மரியம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தோமஸ் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்ரன் ராஜரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும்,றெஜினோல்ட்(கனடா), ஜெயா(பிரான்ஸ்), ஜெனோ(பிரான்ஸ்), ஜெனி(இலங்கை), ஜெகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜான்சி(கனடா), நிர்மலா(பிரான்ஸ்), சாமினி(பிரான்ஸ்), ஜெனிஸ்ரா(இலங்கை), சுவிந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான சேவியர், சின்ராசா, தவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,அயந்பிரதிப், சாறோனி, ஆரோன், எறிக், துஷாரா, சாம், ஜஸ்மீன், ஏஞ்சல், யோவாஸ், அபியூக், அபித்தா, யோயல், யோசியா, யபிறியோன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

**பார்வைக்கு**
Thursday, 25 Nov 2021 3:00 PM - 4:00 PM, Friday, 26 Nov 2021 3:00 PM - 4:00 PM, Saturday, 27 Nov 2021 3:00 PM - 4:00 PM, Sunday, 28 Nov 2021 3:00 PM - 4:00 PM, Monday, 29 Nov 2021 3:00 PM - 4:00 PM, Tuesday, 30 Nov 2021 11:00 AM - 1:00 PM

Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**இறுதி ஆராதனை**
Tuesday, 30 Nov 2021 10:00 AM - 11:00 AM

Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**நல்லடக்கம்**
Tuesday, 30 Nov 2021 2:00 PM - 2:30 PM
Communal Cemetery Cherry Orchard 25 Rue de la Cerisaie, 92700 Colombes, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெகன் (மகன்)** +33782735712

தகவல்: **குடும்பத்தினர்.**

## செல்வி நீலாவதிப்பிள்ளை சுப்பையா B.Sc (இந்தியா)

**தோற்றம் : 12.2.1937** **மறைவு: 23.11. 2021**



மண்டைத்தீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட நீலாவதிப்பிள்ளை சுப்பையா அவர்கள் 23.11.2021 செவ்வாய்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும்,தேவராணி அவர்களின் அன்புச் சகோதரியும்,நடராஜா அவர்களின் அன்பு மைத்துனியும், வினீத்தா, சிந்துஜா, பானுஜா, முருகதீபன் ஆகியோரின் ஆருயிர் பெரிய தாயாரும்,பிரபாகரன், தேவபாலன், ஶ்ரீதரன், மகுதா ஆகியோரின் அன்பு மாமியாரும்,கிருஷான், லஷான், ஜொஷான், தேனுஜன், தெஸ்வின், திவ்யன், சேயோன், லியாம், லூக் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,காலஞ்சென்றவர்களான சுந்தராம்பிகை குமாரவேலு, கமலம் திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

*பார்வைக்கு*
Sunday, 28 Nov 2021 6:00 PM - 9:00 PM, Monday, 29 Nov 2021 1:30 PM - 2:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Monday, 29 Nov 2021 2:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Monday, 29 Nov 2021 4:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவராணி நடராஜா (சகோதரி)** +14168904475

தகவல்: **குடும்பத்தினர்.**

## வடமாகாண மரநடுகை மாதம் 27 கார்த்திகை 2021

**"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தால்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்"**

**கவிஞர் புதுவை இரத்தினதுரை**

## கல்வி TV CHANNEL-1

**27.11.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி TV CHANNEL - 2

**27.11.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
27.11.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# வெளியார் தலையீட்டில் அரசியல் தீர்வு?

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில், அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து இயங்கும் வகையிலான புதிய முயற்சியொன்றில் தாம் ஈடுபட்டிருக்கிறாரென சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். அமெரிக்க பயணத்தை தொடர்ந்து, கனடாவில் பேசுகின்றபோதே, அவர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கின்றார். தமது அனைத்து சந்திப்புக்கள் தொடர்பிலும் அமெரிக்காவுக்கான இந்திய தூதுவருக்கு விளக்கமளித்திருக்கிறார் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

சுமந்திரனின் அமெரிக்க பயணம் தொடர்பில் ஒரு சந்தேகம் முன்வைக்கப்பட்டது. அதாவது, சுமந்திரன் இந்தியாவை புறக்கணித்து செயல்பட முயற்சிக்கின்றார். குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இந்தியாவை நோக்கி கோரிக்கை ஒன்றை முன்வைக்க முயற்சிப்பதை குழப்பும் வகையிலேயே அமெரிக்க சந்திப்பு திட்டமிடப்பட்டதாகவும் ஆங்காங்கே சில அபிப்பிராயங்கள் வெளிப்பட்டன. இந்த அபிப்பிராயங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே சுமந்திரனின் மேற்படி கருத்து அமைந்திருக்கின்றது.

இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வலியுறுத்தி வருகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்த விடயத்தை இந்தியா வலியுறுத்தி வருகின்றது. ஆனால், அமெரிக்கா மனித உரிமைகள் சார்ந்த கரிசனையென்னும் அடிப்படையிலேயே இலங்கை விவகாரத்தை அணுகி வந்திருக்கிறது. இதுவரையான நிலைமை இதுதான். இந்த நிலைமையில் எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படுமா?

ராஜபக்ஷக்களின் அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வருகின்ற நிலையில்தான், கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவொன்று அமெரிக்காவுக்கு சென்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான், அமெரிக்க - இந்திய கூட்டின் கீழ் விடயங்களை கையாளும் முயற்சியொன்றில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். ஒரு வாதத்திற்காக, அமெரிக்க - இந்திய இணைவில் ஒரு புதிய அரசியல் தீர்வு விடயம் வலியுறுத்தப்படுகின்றது என்றாலும், அதனை கோட்டாபய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமல்லவா?

அவ்வாறானதொரு தீர்வு முன்வைக்கப்பட்டு, அதனை ராஜபக்ஷக்கள் மறுத்தால் அப்போது அமெரிக்கா மற்றும் இந்தியா எவ்வாறான நடவடிக்கைளை மேற்கொள்ளும்? இந்தக் கேள்வியிலிருந்துதான் விடயங்களை நோக்க வேண்டும். ஏனெனில், வெளியாரின் தலையீடுகளை ஏற்க மறுத்தால் குறித்த நாடுகள் தங்களின் பலத்தையே பிரயோகிக்க நேரிடும். ஏனெனில், இந்தியாவின் பலத்தை பிரயோகித்ததன் விளைவாக வந்ததே 13ஆவது திருத்தச்சட்டம். அதனை விடவும் சிறந்த ஒன்றை கொண்டுவர வேண்டுமாயின் - அப்போதும் பலத்தைத்தான் பிரயோகிக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் அதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. அதேவேளை இதுவரை கொடுக்கப்பட்டதுபோல் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடான மென் அழுத்தங்களால் ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியாளரை ஓர் எல்லைக்கு மேல் கீழிறங்க வைக்க முடியாது.

இதற்கு மாறாக சில முன்னேற்றங்கள் இடம்பெற வேண்டுமாயின் - மீண்டும் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். அமெரிக்க - இந்திய கூட்டு நலன்களுடன் இணைந்து பயணிக்கக்கூடிய ஆட்சியாளர்களிடம் கொழும்பு இருக்க வேண்டும். அவ்வாறானதொரு சூழலில்தான், ஒரு சில விடயங்களையாவது அமெரிக்க மற்றும் இந்திய தரப்பால் நகர்த்த முடியும். எனவே இந்த பின்புலத்தில் நோக்கினால், அமெரிக்க - இந்திய கூட்டின் கீழ் தமிழ் மக்களுக்கான புதிய அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அவ்வாறாயின் நாம் மேலே குறிப்பிட்டவாறு, கொழும்புமீது பலத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஆனால், இந்த இடத்தில் கேட்டுக் கொள்ள வேண்டிய அடிப்படையான கேள்வி - ஈழத் தமிழர்களுக்காக அமெரிக்கா எதற்காக இலங்கையுடனான இரு தரப்பு உறவுகளை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும்? இதுவரையில் அமெரிக்கா, கொழும்பை அதிகம் அந்நியப்படுத்தாத வகையிலேயே அதன் நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றது.

# இலங்கையை நிராகரித்த அமெரிக்கா!

**- அலசுவது இராஜதந்திரி -**

அமெரிக்கா ஜனநாயகத்தை சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதற்கான மாநாடொன்றை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம்-10ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது. இதற்கென 110 நாடுகளை தகுந்த முறையில் அமெரிக்கா ஆய்வு செய்து அவற்றுக்கு அந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்காவால் தேர்ந்தெடுக்கப்படாத நாடுகள் பல ஜனநாயக நாடுகளாக தம்மை இனங்காட்டியுள்ளபோதிலும் அந்த நாடுகள் ஜனநாயக விழுமியங்களில் மிக முக்கியமானதாக இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை பேணுவதில் தோல்வி கண்டவையாக இருக்கின்றன என்பதையே வெளிக்காட்டியுள்ளது.

அமெரிக்கா நடத்துகின்ற ஜனநாயக மேம்பாட்டுக்கான மநாட்டுக்கு அழைக்கப்படாத நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. இலங்கை ஒரு ஜனநாயக நாடாகத் தன்னை இனங்காட்டியுள்ள போதிலும் ஜனநாயக நடைமுறைகள் உதாசீனம் செயயப்பட்டு ஜனநாயகம் என்ற போர்வையில் தனிநபரை முதன்மைப்படுத்தும் ஆட்சியே இடம்பெறுவதோடு அடிப்படை மனித உரிமைகளும் இலங்கையில் மீறப்பட்டுள்ளன என்றே அமெரிக்க வெளியுறவு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை உட்பட பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடுகளும் அமெரிக்காவால் அழைக்கப்படவில்லை. இதேவேளை தெற்காசிய நாடுகளில் ஈராக், இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவுகள், நேபாளம் ஆகிய நாடுகள் அமெரிக்காவால் அழைக்கப்பட்டுள்ளன. அத்துடன்,சீனாவால் சீண்டப்பட்டு வருகின்ற சிறிய தாய்வான் தேசமும் அமெரிக்காவால் அழைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனநாயக மேம்பாட்டுக்கான மாநாடு குறித்து விடுக்கப்பட்டுள்ள அழைப்புக்கள் அமெரிக்காவின் நலன்களை சர்வதேச ரீதியாக பேணுபவையாக இருக்கின்றன என்றே சில அரசியல் அவதானிகளும் குறிப்பிட்டுள்ளனர்.

இருந்தபோதிலும், அமெரிக்கா தனது ஜனநாயக மாநாட்டுக்காக தேர்ந்தெடுத்துள்ள தொனிப்பொருளாக இருப்பது "ஜனநாயகத்தை மேம்படுத்தலும் ஜனநாயகம் என்ற போர்வையில் இருக்கின்ற தனிநபர் ஆட்சியின் சவால்களும்" என்பதாகவே இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு நன்கு பரிச்சயமானவர். ஏனெனில், அவர் இலங்கையில் யுத்தம் மும்முரமாக இடம்பெற்ற காலங்களில் இராணுவத்திலிருந்தும் விலகி அமெரிக்காவில் தஞ்சமடைந்திருந்தார். அத்துடன், அமெரிக்கா-இலங்கை ஆகிய நாடுகளின் இரட்டைக் குடியுரிமை கொண்டவராகாவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருந்திருந்தார்.

இருந்தபோதிலும் அமெரிக்கா இலங்கையை தான் நடத்துகின்ற ஜனநாயக மேம்பாட்டு மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அழைத்திருக்கவில்லை. இதற்கான காரணத்தை வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டவையாக இருக்கின்ற காரணத்தாலேயே இலங்கை அழைக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.


அமெரிக்கா அழைத்திராத ஏனைய நாடுகளாக சீனா, ரஷ்யா, பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடுகளும் அடங்குகின்றன. அமெரிக்காவின் அழைப்பை பெற்றிராத ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் தம்மை ஜனநாயக ரீதியாக மேம்படுத்தி வருகின்ற நாடுகளைப்போல இனங்காட்டிக்கொண்டாலும் அந்த நாடுகளில் அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் மிகமோசமான முறையில் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், இந்த நாடுகள் ஜனநாயக ரீதியான ஏனைய நாடுகளுக்கு மறைமுக அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றன.

சீனா தன்னை அழைக்காதது ஒருபுறமிருக்க தாய்வான் நாட்டுக்கு அமெரிக்கா விசேட அழைப்பிதழை வழங்கியுள்ளமை தொடர்பாக ஆத்திரமடைந்துள்ளது. ஏனெனில், சீனாவிலிருந்து தப்பிச்சென்றோரே தாய்வானை தமது தனிநாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். அத்துடன், அமெரிக்கா தாய்வானுக்கு இராணுவ ரீதியாக உதவுவதோடு சீனாவையும் அவ்வப்போது தாய்வான் தொடர்பாக எச்சரிப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது.

இதன்காரணமாக தாய்வானை அமெரிக்கா ஒரு நாடாக அங்கீகரித்திருப்பதோடு தாய்வானுக்கு அமெரிக்க மாநாட்டுக்கு அழைப்பிதழ் விடுக்கப்பட்டுள்ளதை சீனா வெகுவாகக் கண்டித்துள்ளது. அமெரிக்காவின் மாநாட்டுக்கு அழைக்கப்படாத பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடுகள் சீனாவின் தயவில் இருப்பவையாகவே காணப்படுகின்றன. இலங்கை சீனாவின் ஒரு சிறிய மாகாணம் போன்றே மாற்றம் கண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இலங்கை ஒரு ஜனநாயக சோசலிஷ குடியரசு என்று அழைக்கப்பட்டாலும் 1978ஆம் ஆண்டு இலங்கையில் புதிய அரசமைப்பின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கொண்டதாகவே இருக்கின்றது.

ஜனநாயகம் என்ற போர்வையில் சர்வாதிகார நடைமுறைகளே இலங்கையில் இருப்பதையும், அடிப்படை மனித உரிமைகள் மீறலாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மற்றும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் என்பவற்றை அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இவற்றின் அடிப்படையில் அமெரிக்கா அதன் ஜனநாயக மேம்பாட்டுக்கான மாநாட்டுக்கு இலங்கையை அழைத்திராதிருப்பது, இலங்கையில் ஜனநாயக விழுமியங்கள் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
போனஸ் வகைகளால் இன்று பணம் வரும். மகிழ்ச்சி கூடும். உறவுகளுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொள்வீர்கள்.

**இடபம்**
சேமிக்கத் தொடங்குவீர்கள். உங்களின் மன திடம் அதிகரிக்கும். குடும்ப வருமானம் உயரும். நன்றி உணர்வை எதிர்பார்க்க வேண்டாம். கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கும்.

**மிதுனம்**
உற்சாகம் உயரும். பிரச்னைகள் விலகும். இன்றைய நாள் இனிதாகும். மனப்பாரம் குறையும். பணம் வரும். உங்களின் செல்வாக்கு உயரும். மனதை அரித்து வந்த பிரச்னை தீரும்.

**கடகம்**
தொழில், பணியில் அதிக கவனம் தேவை. வீட்டில் உள்ள பெரியவர்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுப்புடன் செயல்பட்டு பிரச்னையில் இருந்து மீளுவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒருவருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தள்ளிப்போன நேர்த்திக்கடனை உடனே முடிப்பீர்கள்.

**கன்னி**
நீண்ட நாளாக இருந்து வந்த மனஅழுத்தம் தீரும். பல வேலைகளை இழுத்து போட்டு செய்து வெற்றிகரமாக முடிப்பீர்கள். தம்பதிகள் தேவையற்ற பிரச்னை வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**துலாம்**
பயணங்கள் அதிகமானாலும் சலிப்பில்லாத உற்சாகம் உண்டு. உறவினர், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு கூடும். உங்களின் செயல்களுக்கு குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர்.

**விருட்சிகம்**
உயர்கல்வி, பணியின் பொருட்டு குழந்தைகள் உங்களைப் பிரிவார்கள். சிறு சிறு செலவுகள் இருக்கும். உங்களது வேண்டுதல் நிறைவேறும். திடீர் பணவரவு உண்டு. சகோதரர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்.

**தனுசு**
சிலருடன் நட்பு கொள்ள வேண்டாம் என்று முடிவெடுப்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் செலவு அதிகரிக்கும். நிம்மதி வரும். பேச்சிலும் செயலிலும் இன்று கவனமாக இருங்கள்.

**மகரம்**
வீண் பழி வரக்கூடிய நாள் என்பதால் கவனமாக இருங்கள். தீயோர் ஆலோசனையால் குறுக்கு வழியை நாட வேண்டாம். பணவரவு மனநிறைவளிக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**கும்பம்**
குடும்ப பிரச்னைகள் சீராகும். வேலைச்சுமை அதிகரிக்கும். சகோதரருடன் பனிப்போர் வராமல் தழைந்து போகலாம். குடும்பத்தினருடன் கொஞ்சம் அனுசரித்து செல்வது நல்லது.

**மீனம்**
போட்டிகளில் வெற்றி பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். துணிச்சலான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை அடைவீர்கள். பணியிடத்தில் புகழ் பெறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டு.

# பா.ஜ.கவுடன் அ.தி.மு.கவை ஒப்பிட்டுப் பேச வேண்டாம்

## தமிழக பா.ஜ.க. பொதுச்செயலாளர்

சென்னை, நவ. 27,

“பா. ஜ. க என்பது தேசிய அளவிலான மிகப்பெரிய கட்சி. எனவே, நாங்களும் அ. தி. மு. கவும் ஒன்றல்ல. எங்களோடு அ. தி. மு.கவை ஒப்பிட்டுப் பேசாதீர்கள்” என தமிழக பா . ஜ . க. பொதுச் செயலாளர் கரு. நாகராஜன் தெரிவித்திருக்கின்றார்.



ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது -

“தமிழக மக்களுக்கான பிரச்னைகளைக் கையிலெடுத்துச் செயல்படுவதில், பா. ஜ. க. முன்னேறுகிறது. மேகதாது அணையைக் கட்டக் கூடாது என்று முதலில் போராட்டம் நடத்தியது பா. ஜ. க. அதே போல், முல்லைப் பெரியாறு போராட்டத்தையும் அ.தி.மு.கவுக்கு முன்பே நடத்தியது பா.ஜ.கதான்.

மற்றபடி அ. தி. மு. க முன்னேறுகிறதா, பின்னேறுகிறதா என்பதெல்லாம் அந்தக் கட்சியினுடைய வேலை. பா. ஜ. க என்பது தேசிய அளவிலான மிகப்பெரிய கட்சி. எனவே, நாங்களும் அ. தி. மு. கவும் ஒன்றல்ல. எங்களோடு அ.தி. மு. கவை ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.

மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களுமே அற்புதமானவை. ஆனால், நாட்டிலுள்ள ஒரு பகுதி விவசாய மக்கள் அந்தச் சட்டங்களைப் பற்றி சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. எனவே, தேசத்தின் நன்மைக்காகவே சட்டங்களை வாபஸ் பெற்றிருக்கிறது மத்திய அரசு.” - என்றார்.

# வரலாறு காணாத வகையில் கொட்டித் தீர்த்த கனமழை

## சில தினங்கள் தொடரும் என எச்சரிக்கை

சென்னை, நவ. 27,

தெற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் முதல் மீண்டும் கனமழை பெய்ய தொடங்கி உள்ளது.




குறிப்பாக தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் கடந்த இரு நாட்களாக அதிக கனமழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை தொடங்கிய மழை பிற்பகலில் கனமழையாகவும், அதன் பின்னர் அதிகன மழையாகவும் கொட்டித் தீர்த்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு இல்லாத அளவில் காயல்பட்டினத்தில் ஒரே நாளில் 306 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

தூத்துக்குடி அரசு மருத்துவமனை வளாகம் முழுவதும் மழை நீர் முட்டளவு தேங்கி நிற்பதால் நோயாளிகளை பார்க்க உறவினர்கள் செல்ல முடியாமல் தவித்தனர். கன மழை காரணமாக தூத்துக்குடி ரயில் நிலையத்தில் உள்ள தண்டவாளங்களை வெள்ளம் சூழ்ந்தது.

கனமழை காரணமாக திருச்செந்தூர் - நெல்லை சாலையில் அங்கமங்கலம் பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு மாவட்ட கலெக்டர், பொதுப் பணித்துறையினர், வருவாய் துறையினர் உள்ளிட்டவர்கள் விரைந்து சென்று துரித நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் காரணமாக இன்று காலை முதல் அங்கு போக்குவரத்து சீரானது.

திருச்செந்தூர் சுற்று வட்டார பகுதியில் பெய்த கன மழை காரணமாக சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குள் மழை நீர் புகுந்தது. கோவில் கிழக்கு பகுதியில் உள்ள கிரி பிரகாரத்தில் மழை நீர் முழங்கால் அளவு தேங்கியது. பின்னர் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் கோவிலில் தேங்கிய மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டது.

ஆனால் சுவாமி மூலவர் இருக்கும் மகா மண்டபத்திற்குள் தண்ணீர் செல்லவில்லை. கோவில் நாழிகிணறு நிறுத்தத்தில் இருந்து கார் செல்ல முடியாத அளவு மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. எனினும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

இதேவேளை, சென்னையிலும் நேற்றுமுன்தினம் இரவு முதல் மழை விட்டு விட்டு பெய்தது. இந்நிலையில், நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, கனமழையும் பெய்து வருகிறது. அடுத்த சில தினங்களுக்கு இது தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கமல் குணமடைந்து வருகிறார்

## மருத்துவமனை தகவல்

சென்னை, நவ. 27,

கொரோனா தொற்றால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கமல்ஹாசன் நன்றாக குணமடைந்து வருகிறார் என்று மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசனுக்கு சமீபத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் தனக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின், சீமான் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், திரையுலக பிரபலங்கள் பலரும் கமல்ஹாசன் விரைந்து குணமடைய வேண்டி வாழ்த்து தெரிவித்தனர். நடிகர் ரஜினிகாந்த், கமலிடம் தொலைபேசியில் பேசி, அவரது உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

இந்நிலையில் கமலின் உடல்நிலை குறித்து ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனை நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், “ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் கமல் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் நன்றாக குணமடைந்து வருகிறார். அவரது உடல்நிலை தொடர்ந்து சீராக உள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் சீனாவுக்கு

## அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, நவ. 27

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை சீனாவின் ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரச உயர்மட்டம் தீர்மானித்துள்ளதாக நம்பகமாக அறியவருகின்றது.**

துறைமுகத்தின் மேற்கு முனையம், இந்திய கூட்டு நிறுவனமான அதானிக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை சீனாவின் அரச நிறுவனமான 'சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கம்பனி' என்ற நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் பேசப்பட்டது.

சீன நிறுவனத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டபோதிலும் அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் உள்நாட்டு அதிகாரிகளே கையாளவேண்டுமெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

இதேவேளை, இந்திய-சீன நாடுகளுக்கிடையிலான உறவில் நடுநிலை வகிக்க விரும்புவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா, ஜப்பான் நாடுகளுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கைச்சாத்திடப்பட்டது. எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை நிராகரித்ததுடன் மேற்கு முனையத்தை வழங்குவதற்கு தீர்மானித்தது.

இந்நிலையிலேயே கிழக்கு முனையத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

# இ.போ.ச வருமானம் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 27

பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் ரூபாய் 6 கோடியாக அதிகரித்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 தொற்று நோய்க்கு முன்னர் சராசரி தினசரி வருமானம் ரூ.8-8.5 கோடிக்கு இடைப்பட்ட தாக காணப்பட்டது.

கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் ஈட்டிய வருமானம் ரூ.60-70 லட்சமாகக் குறைந்துள்ளது என்று அவர் கூறினார்.(அ)

## யுகதனவி விவகாரம்

# வழக்கை விசாரிப்பதற்கு ஐந்து நீதியரசர்கள் குழாம்

கொழும்பு, நவ. 27

கெரவலப்பிட்டி, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் அரசுக்கு சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது மற்றும் எரிவாயு விநியோக ஏகபோக உரிமையை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தை ரத்து செய்யக் கோரிய அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலிக்க ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாமொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜெயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரீ.பி. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் சார்பில் சட்டமா அதிபர் ஆஜராகியிருந்தபோதிலும், அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் சார்பில் தனிப்பட்ட சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குறிஞ்சாக்கேணி களப்புப் பகுதியில் பாதுகாப்பான படகு சேவை ஆரம்பம்





மட்டக்களப்பு, நவ. 27

பயணிகள் படகு கவிழ்ந்து பாடசாலைகள் மாணவர்கள் உள்ளடங்களாக 6 பேர் உயிரிழந்ததையடுத்து குறிஞ்சாக்கேணி களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் ஏற்பாட்டில் இந்த பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை, கிண்ணியாவில் உள்ள குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை அப்பகுதி மக்கள் இந்தப் போக்குவரத்து முறையைப் பயன்படுத்த முடியும் என கடற்படை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் கீழ் ஒரே நேரத்தில் 25 பயணிகளை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும் இந்த படகு சேவையில் ஈடுபடவுள்ளது.(அ)

# கிளிநொச்சியில் சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

கிளிநொச்சி, நவ. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 6 நீர்ப்பாசன குளங்கள் வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7 மணி வாசிப்பின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்ப்பாசனக் குளமான 36 அடி அடைவுமட்டம் கொண்ட இரணைமடுக்குளம் 31 அடி 3 அங்குலமாக உயர்ந்துள்ளது.

25 அடி அடைவுமட்டம் கொண்ட அக்கராயன்குளம் 23 அடி ஓர் அங்குலமாகவும், 10 அடைவுமட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான்குளம் 7 அடி 11 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

26 அடி அடைவுமட்டம் கொண்ட கல்மடுகுளம் அடைவு மட்டத்தை அடைந்து ஓர் அங்குலம் வான் பாய்ந்து வருகிறது.

19 அடி அடைவுமட்டம் கொண்ட புதுமுறிப்புகுளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலம் வான் பாய்ந்து வருவதுடன், 12 அடி அடைவு மட்டம் கொண்ட பிரமந்தனாறு குளம் அடைவுமட்டத்தை அடைந்து 7 அங்குலம் வான் பாய்ந்து வருகின்றது.



இதேவேளை, 10 அடி ஆறு அங்குலம் கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலம் வான் பாய்ந்து வருவதுடன், 9 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட வன்னேரிக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 4 அங்குலம் வான் பாய்ந்து வருகின்றது. 8 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட குடமுருட்டிக்குளம் அடைவு மட்டத்தை அடைந்து வான் பாய ஆரம்பித்துள்ளதாக நீர்ப் பாசன திணைக்களம் தெரிவித் துள்ளது.

நீர் நிலைகளுக்கான நீர் வருகை தொடர்ந்தும் காணப்படுவதாலும், மாவட்டத்துக்கு மழை பெய்யும் சார்த்தியக்கூறுகள் தொடர்ந்தும் இருப்பது தொடர்பில் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நீர்நிலைகள், நீர்வடிந்தோடும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும், தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# 'மரியசேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்கள்'

யாழ்ப்பாணம், நவ. 27

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலி ஊடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வரும் ஆய்வரங்கத் தொடரின் ஆறாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்)இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 'மரிய சேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்கள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மேரி வினிபிரிடா சுரேந்திரராஜ் ஆய்வை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809,கடவுச் சொல் உிய என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும். (அ)

# நாணய நிதியத்தை நாடாவிடின் டொலர் 300 ரூபாயை தாண்டும்

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை



கொழும்பு, நவ. 28

அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்தால் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்டால் அமெரிக்க டொலரின் பெறுமதி சுமார் 240 ரூபாயாகவே இருக்கும் எனவும், இல்லையெனில் அமெரிக்க டொலரின் பெறுமதி சுமார் 300 ரூபாயாக உயரும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படுவது ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கான உத்தரவாதமாகவே பார்க்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் சுமார் 600 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதால், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதைத் தவிர இலங்கைக்கு வேறு வழியில்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நிபந்தனைகள் திணிக்கப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான இணையவழி கலந்துரையாடலின்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். (அ)

# கிளிநொச்சி மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை!

கிளிநொச்சி, நவ. 27

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் வாழும் மக்களை அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இது குறித்து இடர் முகாமைத்துவப் பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் தற்போது அதிகரித்து வருவதனால் தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் வான் கதவுகள் திறக்கப்படும்.

எனவே இரணைமடுக்குளத்தில் கீழ் பகுதிகளில் வாழும் மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்று கூறப்பட்டுள்ளது. (அ)

# கிளிநொச்சியில் 57 நாள்களில் 113 மாணவர்களுக்கு தொற்று

கிளிநொச்சி, நவ. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 57 நாட்களில் 113 பாடசாலை மாணவர்கள் உட்பட 1,452 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மற்றும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

# அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய 1000 கொள்கலன்கள் துறைமுகத்தில்!

கொழும்பு, நவ. 27

அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் டொலர் தட்டுப்பாடு காரணமாக உருளைக் கிழங்கு, பருப்பு, பெரிய வெங்காயம், சீனி,நெத்தலி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய ஆயிரம் கொள்கலன்களே இவ்வாறு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அமைச்சரவை கூட்டத்தின் போது அவர் கூறினார்.

சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை எல்லையற்ற வகையில் அதிகரித்துள்ளமைக்கு இதுவே காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இந்தியாவுக்கு விமான சேவையை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, நவ. 27

கொரோனா தொற்றுநோய் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இந்தியாவுக்கான விமான சேவைகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்தார்.

தொற்றுநோய்க்கு முன்னர் இருந்ததைப் போலவே ஸ்ரீலங்கன் விமான சேவையை மீண்டும் நிறுவ உறுதிபூண்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இந்திய நடவடிக்கைகள் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாக அமையுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க இது ஒரு சிறந்த வாய்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# 100 நாடுகள் பங்கேற்கும் மாநாட்டில் இலங்கையை புறக்கணித்தது அமெ.

கொழும்பு, நவ. 27

100 நாடுகள் பங்கேற்கும் மெய்நிகர் வழி ஜனநாயக மாநாட்டுக்கு இலங்கைக்கு அமெரிக்கா அழைப்பு விடுக்காததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கையை புறக்கணித்துள்ளார்.

ஜனநாயக மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம் ஆகிய தென்னாசிய நாடுகளுக்கு பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளையும் அமெரிக்க ஜனாதிபதி புறக்கணித்துள்ளார்.

தாய்வான், பிலிப்பைன்ஸ், மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்கு இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 9ஆம், 10 ஆம் திகதிகளில் 100 நாடுகள் பங்கேற்கும் மெய்நிகர் வழி ஜனநாயக மாநாடு நடைபெறவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## திடீரென வெடிக்கும் சிலிண்டர்

# எரிவாயுவின் தரத்தை ஆராய நடவடிக்கை

கொழும்பு, நவ. 27

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இரண்டு தனியார் நிறுவனங்களான 'இன்டெக்' இணைந்து எரிவாயு சிலிண்டர்களின் எரிவாயுக் கலவையை ஆராய்ந்து வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் 350 மில்லியன் எரிவாயு சிலிண்டர்களில் ஐந்து அல்லது ஆறு விபத்துக்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன. 2015ஆம் ஆண்டு முதல் லாப்ஸ் நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டர்களில் 12 விபத்துக்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

எரிவாயு விபத்துக்கள் இல்லாத எந்த நாட்டையும் உலகில் காண முடியாது-என்றார். (அ)







# ஓய்வுநிலை வங்கியாளர்கள் யாழில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

வடபிராந்திய தேசிய சேமிப்பு வங்கியின் உதவியுடன் யாழ். மாவட்ட தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கம் 75 வயதை பூர்த்திசெய்த ஓய்வுநிலை வங்கியாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கி சுற்றுலா பங்களாவில் தலைவர் ராஜா மகேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் பிரதேச முகாமையாளர் ந.பகீரதன் கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் இ.சத்குணராஜா, க.சுந்தரலிங்கம், பொன். குலவீரசிங்கம், ம.யோக்கிம் பிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# பொலிஸாரின் சூட்டில் 'டிங்கர் லசந்த' மரணம்!

கொழும்பு, நவ. 27

முக்கிய உலக பாதாளக்குழு உறுப்பினர் "டிங்கர் லசந்த" என அழைக்கப்படும் ஹேவா லுனுவிலகே லசந்த பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை களுத்துறை - தியகம பகுதியில் பொலிஸாருடன் இடம்பெற்ற மோதலில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட நபர் பாதாள உலகக்குழு உறுப்பினரான சன்ஷைன் சுத்தாவின் கொலை உள்ளிட்ட மேலும் பல படுகொலை சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மீண்டும் சிலிண்டர் வெடிப்பு! ஆறாவது சம்பவமாக பதிவு!!

கொழும்பு, நவ. 27
குருநாகல் - நிக்கரவெட்டி பிரதேசத்தில் நேற்றைய தினமும் எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்தது. இதனால், சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்ட போதும் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.
இந்தச் சம்பவத்துடன், நாட்டில் மிகக் குறுகியகாலத்தில் பதிவான ஆறாவது வெடிப்பு சம்பவமாக இது பதிவாகியுள்ளது.
நிக்கரவெட்டி பிரதேசத்தின் கந்தேகெதர பிரதேசத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், வீட்டில் எவரும் இருக்கவில்லை என்பதால் பாதிப்புக்கள் தவிர்க்கப்பட்டன. எனினும், சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது.
இதேவேளை, கடந்த 13ஆம் திகதி பொலநறுவை மாவட்டம் வெலிகந்தை - சுதுன்பிட்டி பிரதேசத்தில் சமையல் எரிவாயு கசிவினால் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்த யுவதி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
இந்த இரு சம்பவங்களுடன் இணைத்து இந்த மாதத்தில் மாத்திரம் சமையல் எரிவாயு கசிவின் காரணமாக 6 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
கடந்த 4 ஆம் திகதி வெலிகம - கப்பரதொட்ட பகுதியிலுள்ள உணவகமொன்றிலும், கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றிலும் , 20 ஆம் திகதி கொழும்பிலுள்ள குதிரை பந்தய திடலின் பார்வையாளர் கூடத்திற்கருகிலிருந்த உணவகத்திலும் அடுத்தடுத்து வெடிப்பு சம்பவங்கள் பதிவாகின.
இந்த வெடிப்பு சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று பிரதான சமையல் எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ள தோடு , பாவனையாளரின் கவனயீனமே இதற்கான காரணம் என்றும் அவை குறிப்பிடுகின்றன.
எவ்வாறிருப்பினும் இவ்வாறு தொடர்ச்சியாகப் பதிவாகிக் கொண்டிருக்கும் வெடிப்பு சம்பவங்களுக்கான உண்மை காரணியை அறிந்து , நுகர்வோர் மற்றும் பாவனையாளரான பொது மக்களின் உயிர் பாதுகாப்பு அரசாங்கம் உள்ளிட்ட உரிய தரப்பினர் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீதியில் ரயர் எரித்த இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், நவ. 27
வீதியில் ரயர் எரித்த இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குருநகர் பகுதியில் நேற்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இன்று மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படும் நிலையில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு, கிழக்கில் இராணுவம், பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
இந்த நிலையிலேயே குருநகரில் வீதியில் ரயர் எரித்த இருவரை இராணுவத்தினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர். (ஐ-3)

# மரக்கன்று கண்காட்சி நாளை வரையும் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27
சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்று வரும் மரக்கன்றுகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வட மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் என்ற பெயரில் மலர்ச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மலர் முற்றம் ஒன்றைக் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைத்திருந்தது.
இந்த மலர் முற்றம் 26ஆம் திகதிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்னல் தாக்கி இளைஞன் மரணம்!

வவுனியா, நவ. 27
வவுனியா, இராசேந்திரங்குளம் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டு இருந்த இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கி மரணமடைந்தார்.
நேற்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வவுனியாவில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருவதுடன், அவ்வப்போது இடி மின்னல் தாக்கமும் ஏற்பட்டு வருகின்றது.
இந்நிலையில் இராசேந்திரங்குளம் குளப்பகுதியில் இளைஞர் ஒருவர் மீன்பிடித்துக் கொண்டு இருந்துள்ளார். இதன் போது அந்தப் பகுதியில் மின்னல் தாக்கியதில் 30 வயதான இளைஞன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

# பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்று அழைப்பாணை

கொழும்பு, நவ. 27
போதிய புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தடுக்க நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சாட்சியமளிப்பதற்காக, பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்னவை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் நாமல் பலல்லே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷதீன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.
நீதியரசர்கள் குழாம், சி.டி. விக்ரமரத்னவை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை வெளியிட்டு உத்தரவிட்டனர்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அதிநவீன 'லபரோஸ்கோபி' சிகிச்சைத் தொகுதி

மன்னார், நவ. 27
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து சுமார் 32 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி (3D laparoscopy) சத்திர சிகிச்சை தொகுதி அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் இடம் பெற்றது.
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் மௌ.மதுரகீதன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா. செந்தில்நந்தனன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் ,மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் க. செந்தூர் பதிராஜா ஆகி யோர் இணைந்து வைபவ ரீதியாக பொது சத்திர சிகிச்சை விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் மௌ.மதுரகீதன், மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் எ.புஸ்பகாந்தன் மற்றும் சத்திர சிகிச்சை கூட பொறுப்பு தாதியர் க.யாழினி ஆகியோரிடம் நோயாளர் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.
அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி சத்திரசிகிச்சை முறையானது வயிற்றை வெட்டி திறக்காமல் சிறு துளைகளினூடாக கமெரா மற்றும் கருவிகளையும் உட்செலுத்தி சத்திரசிகிச்சை செய்யும் ஒரு வசதியாகும்.
இந்த முறைமையில் சத்திர சிகிச்சை செய்யும்போது ஏற்படும் காயம் மற்றும் வலி என்பன மிக குறைவாகவே காணப்படும்.
மிகவும் பெறுமதி வாய்ந்த அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி வசதியானது



இலங்கையின் ஒரு சில வைத்தியசாலைகளில் மாத்திரமே காணப்படுகின்றது.
குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் இந்த நவீன முப்பரிமாண சத்திர சிகிச்சை தொகுதியானது முதன் முதலாக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டது.

யாழில் தடுத்துவைக்கப்பட்டிருந்த

# இந்திய மீனவர்களில் 18பேர் நேற்றிரவு சென்னை பயணம்

யாழ்ப்பாணம், நவ. 27
கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களில் 18 பேர் நேற்று சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
பருத்தித்துறை கடற்பரப்புக்குள் இரு படகுகளில் ஊடுருவிய 23 இந்திய மீனவர்களையும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் விடுவித்த நீதிமன்றம் அவர்களது படகுகளை அரச உடைமையாக்கியது.
இதன் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் தாயகம் திரும்ப ஏற்பாடுகள் மேற்கொண்டவேளை மூவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இதனால் எஞ்சிய 20 பேரையும் தமிழ்நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.
விமானச் சிட்டை எடுப்பதற்காக நேற்று முன்தினம் மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் மேலும் இருவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது.
இதனால் 18 பேர் மட்டும் நேற்று நள்ளிரவு விமானத்தில் சென்னை சென்றனர்.
இவ்வாறு செல்வோர் இன்று காலை அவர்களது வீடுகளுக்கு சென்றடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.
கொரோனா தொற்றுக்கு இலக்கான ஏனைய ஐவரும் குணமடைந்த பின்னர் தாயகம் அனுப்பி வைக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. (அ-03)

# எரிவாயு சிலிண்டர்களை உடனே பரிசோதியுங்கள்!

கொழும்பு, நவ. 27
வீடுகளில் ஏற்படும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களை தவிர்ப்பதற்கு வீட்டில் உள்ள மின் கட்டமைப்பை பரிசோதிக்குமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
எரிவாயு விபத்துக்கள் இடம்பெற்ற எந்த ஒரு இடத்திலும் சிலிண்டர்கள் வெடித்திருக்கவில்லை என தெரிய வந்துள்ளது.
இதனால் மின்சாரக் கட்டமைப்புகளை சோதனையிட்டு பாதுகாப்பாக உள்ளதா என உறுதி செய்துக் கொள்ளுமாறு அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி ஆய்வாளர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அந்த இடங்களில் உள்ள திரவ பெற்றோலிய வாயு வெளியேறி காற்றில் கலந்துள்ளமையினால், மின்சார சுவிட்ச் மூலம் ஏற்படும் தீப்பொறி பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடும் என அவர் குறிப்பிட்டார்.
காலையில் எழுந்து பார்க்கும்போது வீட்டில் எரிவாயு நாற்றம் வீசினால் மின்சாரக் குமிழிகளை ஒளிர செய்யாமல், கதவு, ஜன்னல்களை திறக்காமல், நாற்றம் குறையும் வரை சமையல் எரிவாயுவை பயன்படுத்தவேண்டாம் என அவர் மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்



> **தனது இறுதி நாள் வரை, தனது சொந்த விருப்பு வெறுப்புகள் ஏதுமின்றி மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்ட அவரது வாழ்வியல்பு, இன்று அரசியலில் இருக்கும் அனைத்துச் செயல்பாட்டாளர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.**

# ஆனந்தி அண்ணர்: தேவை உணர்ந்து வாழ்ந்த அரசியற் கடமையாளன்

அரசியல் என்றால் என்னவென்ற கேள்விக்கு, தான் சார்ந்த சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது, என்பதே பொருத்தமான பதிலாக இருக்கும்.

அவ்வாறான சமூகப் பணியை, அரசியலை, பலர் அதுவே தமது வாழ்க்கை என்கிறார்கள். குறிப்பிட்ட சிலர் மட்டுமே சமூகப் பணியை, அரசியலை, வாழ்வின் கடமை என்று எண்ணிச் செயல்படுகின்றனர்.

அரசியல்தான் எமது வாழ்க்கை என்று கூறிக் கொள்பவர்களால்தான் அரசியல் இன்று சாக்கடையாக்கப்பட்டுள்ளது. தம்மால் இயலாத காலத்திலும் கூட அரசியலைக் கைவிட, கைமாற்ற துணிகிறார்கள் இல்லை. தமது அந்திம காலத்தை எண்ணி அச்சப்படுகிறார்கள். அரசியல் வரப்பிரசாதங்களை இழக்க மனமின்றியுள்ளனர்.

அரசியலை கடமையென்று கருதும் மனிதர்கள் சொற்பமாக இருப்பினும், அவர்கள் தனித்துவமானவர்களாகவும் முன்னுதாரணமானவர்களாகவும் வாழ்கிறார்கள் அல்லது வாழ்ந்து மறைந்தும் வாழ்கிறார்கள் எனலாம். அரசியலை கடமையாக மட்டும் எண்ணும் ஒரு மனிதன் தனது பணியைத் தேவைப்படும் நேரங்களில், தேவைப்படும் இடங்களில் நிறைவேற்றவும் தேவைப்படாதவிடத்து தவிர்க்கவும் என்றுமே தயங்குவதில்லை.

தனது கிராமத்திற்கான, பிரதேசத்திற்கான, தேசத்திற்கான, இனத்திற்கான சமூகப் பணியை கடமையாக எண்ணி, மதித்து நிறைவேற்றிய அற்புதமான மனிதரே - வடமராட்சி கொம்மாந்துறையைப் பூர்வீகமாகவும், யாழ்ப்பாணம் கல்லுவம் கிராமத்தை வாழிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சதானந்தம் (ஆனந்தி அண்ணர்) ஆவார்.

எழுபத்தாறு வயதில் இயற்கை எய்தும் வரையிலும், அன்றாட வாழ்வியலில் தமிழ் மக்கள் சந்தித்த நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும், இனத்தோடு இணைந்து பயணித்த இனப் பற்றாளர் ஆனந்தி அண்ணர் என்றால் மிகையாகாது.

இளவயதில், தன்னார்வத்துடன், தனது கிராமத்தினதும், கல்வி கற்ற பாடசாலையினதும் முன்னேற்றத்தில் அதீத அக்கறையுடன் செயற்பட்ட அவர் - கிராமத்தின் தபாலகத்துக்கு வரும் அரச வர்த்தமானியை தவறாது தேடி தகவல் திரட்டும் இளைஞராக அன்றைய நாட்களில் விளங்கினார்.

அந்த தகவல்களை வைத்துக் கொண்டு - அரச கட்டமைப்பின் ஊடாக பெற்றுவிடக்கூடிய நன்மைகளைத் தனது சமூகத்திற்குப் பெறுவதில் ஆர்வம்கொள்ளத் தன்னைச் சுற்றியிருந்த அனைவரையும், குறிப்பாக சக வயது இளைஞர்களை ஊக்கப்படுத்துபவராக ஆனந்தி அண்ணர் இருந்தார்.

கிராமத்தில் இயங்கிய முன்பள்ளிக்கு தேவையான சத்துணவைப் பெற்றுக் கொள்வதன் மூலம் 'காந்தீயம்' தொண்டு அமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட அவரது தொடர்பு தொடர்ந்து வலுப்பெற்றதன் மூலம் - பின்னர் 'காந்தீயம்' அமைப்பின் முதன்மைச் செயற்பாட்டாளராகவும் காந்தீயத்தின் யாழ் மாவட்டப் பொறுப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

1977 ஆம் ஆண்டு பேரினவாத வன்முறைகளால் விரட்டியடிக்கப்பட்டு, ஆதரவற்றவர்களாக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களை வடக்கிலும் கிழக்கிலும் பல பகுதிகளிலும் மீளக் குடியமர்த்தி, அவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டில் 'காந்தீயம்' அமைப்புடன் இணைந்து செயற்பட்டவர்களுடன் ஆனந்த அண்ணர் நெருக்கமானார்.

அதே போல - கிழக்கில் இயற்கை அனர்த்தத்தால் பேரழிவைச் சந்தித்த மட்டக்களப்புப் பிரதேசத்தில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களுடனும் அவருக்கு ஏற்பட்ட உறவுகள், அவரைத் தமிழ் தேசிய இன விடுதலைச் சிந்தனையுடன் செயற்பட வைத்ததுடன், தேசிய இன விடுதலைச் சிந்தனை கொண்ட இளைஞர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

சாந்தமான அவரது குணம், மிக எளிமையான நடைமுறை, அயராத செயற்பாடு, இரகசியங்களை பாதுகாப்பதில் அவர் காட்டிய உறுதி என அனைத்துமே - நாளடைவில் அவரைச் சுற்றியிருந்தவர்களின் மத்தியில் அவர் மீது பெரும் மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

அக் காலத்தில் காந்தீயம் அமைப்புடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பின் தலைவரான உமாமகேஸ்வரன் மற்றும் இன்னொரு தொடக்க கால உறுப்பினரான சந்ததியார் போன்றோருடன் வலுவான தொடர்புகள் ஆனந்தி அண்ணருக்கு ஏற்பட்டன.

தமிழ் மக்களது விடுதலைக்காகச் செயற்பட்ட அமைப்புகளும் அதன் உறுப்பினர்களும் தொடர்ச்சியாகச் சந்தித்துவந்த நெருக்கடிகளைப் போல ஆனந்தி அண்ணர் அவர்களும் நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கினார்.

'காந்தீயம்' அமைப்பு அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்டு அதன் தலைவர்களான மருத்துவர் இராஜசுந்தரம் மற்றும் டேவிட் அய்யா ஆகியோர் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஆனந்தி அண்ணரும் தேடப்படத் தொடங்கினார்.

இந்த வேளையில் தன்னைத் தலைமறைவு வாழ்க்கைக்கு மாற்றிக் கொண்ட ஆனந்தி அண்ணர், அதுவரை 'காந்தீய' வழிமுறைகளில் கொண்டிருந்த நம்பிக்கைக்கு மாற்றாக - ஆயுதப் போராட்டம் ஒன்றின் தேவைக்கான நியாயங்களை மனமார ஏற்றுக்கொண்டவராகவும் மாறினார். அதன் விளைவாக - ஏற்கெனவே வலுப்பெற்றிருந்த தொடர்புகளின் ஊடாக, உமாமகேஸ்வரனின் தலைமையை ஏற்று புளொட் அமைப்புடன் தன்னை முழுமையாக அவர் இணைத்துக்கொண்டார்.

ஆனந்தி அண்ணரிடம் இருந்த முதிர்ச்சி, நிதானம், ஞானம், தேர்மை என்பவற்றால் ஈர்க்கப்பட்ட உமாமகேஸ்வரன் - 1983ஆம் ஆண்டில், புளொட் அமைப்பின் நிர்வாகச் செயலாளராகவும், பின்னர் மேலதிக பொறுப்பாக, இயக்கத்தின் பொருளாளராகவும் ஆனந்தி அண்ணரை நியமித்தார்.

1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்பு விடுதலைப் போராட்டத்திற்கான மார்க்கங்கள் மாற்றமடைந்ததற்கமைய - புளொட் அமைப்பும், தனது அரசியல் பிரிவை 'ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி' எனும் அரசியல் கட்சியாக இலங்கைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட பின்பு - அப்போது பாதுகாப்பு காரணங்களுக்காகத் தமிழ்நாட்டில் தங்கியிருந்த ஆனந்தி அண்ணரை நாட்டுக்கு வரவழைத்து, கட்சியின் செயலாளராக நியமித்தார் உமாமகேஸ்வரன்.

தனது கொள்கையிலும், நிதியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளிலும் அவர் கொண்டிருந்த பற்றுறுதியுடனான நேர்மையான செயல்பாடுகள் காரணமாக அவர் மீது அனைவரும் கொண்டிருந்த நம்பிக்கை ஒன்றே ஒரு

குரு இரத்தினலிங்கம்

கட்சியின் செயலாளர் பொறுப்பு அவரைத் தேடி வந்ததன் காரணமாகும்.

உமாமகேஸ்வரன் அவர்களின் மறைவுக்குப் பின்பு, ஏற்கெனவே ஏற்றிருந்த அரசியல் கட்சியின் தலைமைப் பொறுப்போடு - புளொட் அமைப்பினது தலைமை பொறுப்பையும் சித்தார்த்தன் ஏற்றுக்கொண்டதன் பின்னர் - அகத்திலும் புறத்திலும் இருந்து எழுந்த பல்முனை நெருக்கடிகளையும் எதிர்கொண்டு அமைப்பை வளர்த்துச் செல்வதற்கு, சித்தார்த்தனுக்கு உற்ற துணையாக ஆனந்தி அண்ணர் தனது இறுதி மூச்சு வரை பக்கத்தில் நின்றார்.

தனது இறுதி நாள் வரை, தனது சொந்த விருப்பு வெறுப்புகள் ஏதுமின்றி மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட அவரது வாழ்வியல்பு, இன்று அரசியலில் இருக்கும் அனைத்துச் செயல்பாட்டாளர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் சமரசத்திற்கு இடமில்லாத உறுதியான கொள்கை, விடுதலையை நோக்காகக் கொண்ட அமைப்புகளிடையேயான ஐக்கியம் என்பவற்றைத் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் தொடர்ந்து அவர் வலியுறுத்தி வந்தார்.

விடுதலை உணர்வுக்கும் அப்பால் அவர் பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இடதுசாரிக் கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் கலைகளை இரசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கணனி மூலமான செயல்பாடுகள் ஆரம்பமான காலங்களிலேயே தேர்ந்த பக்க வடிவமைப்பாளராக திகழ்ந்தார். யோகா கலையை கற்றுணர்ந்திருந்த அவர் தான் அறிந்ததை ஏனையோருக்கு சொல்லிக் கொடுப்பவராக விளங்கினார்.

இளவயது முதல் விவசாயத்தில் நாட்டமுள்ளவராக விளங்கிய ஆனந்தி அண்ணர், உவர்த்தன்மை கொண்ட வல்லைவெளிக்கருகில் வெற்றிகரமாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட ஒருவராக இருந்தார். விவசாயத்தில் காலத்திற்கேற்ப தொழில்நுட்ப விடயங்களை புகுத்த வேண்டும் என்பதில் தெளிவான சிந்தனை கொண்டவராக இருந்த அவர், இன்று அதிகம் பேசப்படும் சேதனப் பசளை விவசாயத்தை பல காலத்திற்கு முன்பே ஊக்கப்படுத்திய ஒருவராக விளங்கினார். வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சில் குறிப்பிட்ட காலம் விவசாய அமைச்சரின் இணைப்புச் செயலாளராக செயற்பட்ட அவர் பொருத்தமான, பயனுள்ள ஆலோசனைகளை வழங்கும் ஒருவராகவும் இருந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் பயண வரலாற்றை வெளிக் கொணரும் ஆவணங்களின் பாதுகாப்பில் எப்போதும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்ட ஆனந்தி அண்ணர், குரும்பசிட்டி கனகரட்ணம் தம்பதிகள் நீண்டகாலமாகப் பாதுகாத்த ஆவணங்களை தொடர்ந்தும் பாதுகாக்க முடியாத ஒரு தருணத்தில், அவர்களது பணி தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல அனைத்து வழிகளிலும் உதவி புரிந்திருந் தார்.

தனது பொது வாழ்வில் பல அமைப்புகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக செயற்பட்ட அவர், தனக்கென எந்த ஆதாரத்தையும் தேட விரும்பாத உன்னதமானவர். இடப்பெயர்வுகள், தலைமறைவு வாழ்க்கை என காலங்கள் நகர்ந்தபோதும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்றியவர்.

புனர்வாழ்வு அமைப்பின் செயற்பாட்டாளராக, ஆயுதப் போராட்ட அமைப்பின் உறுப்பினராக, அரசியல் கட்சியின் செயலாளராக மூன்று வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு கால கட்டங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு எம்மை விட்டுப் பிரிந்துள்ள ஆனந்தி அண்ணரின் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் புரிந்து கொள்ளும் ஒருவரால், தமிழ் மக்களின் விடுதலைப் போரட்டத்தின் தொடர்ச்சியான பரிணாமங்களையும் புரிந்து கொள்ள முடியும். அண்மைக் காலமாகவே, தனது வயது மூப்பின் காரணமாக - தனது வசமுருந்த பொறுப்புகளை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க விரைந்து ஆவன செய்யுமாறு கட்சித் தலைவர் சித்தார்த்தன் அவர்களிடம் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்

தனிமனித ஒழுக்கம், ஏற்ற பொறுப்பில் நிறைவாய் பணி செய்தல் என்பவற்றில் சிறந்த உதாரணமாய் விளங்கிய ஆனந்தி அண்ணரைப் போல வாழ்வதன் மூலம் மட்டுமே அவருக்கான அஞ்சலிகளை அர்த்தமாக்க முடியும் என்பதுடன், இனத்திற்கான தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். ■

# 50 மரபணு பிறழ்வுகளுடன் திரிபு: கொரோனாவின் புதிய அச்சுறுத்தல்

**ஜேம்ஸ் கலேகர்**

நாம் மீண்டும் நமக்கு பழக்கப்பட்ட இடத்திற்கே வந்துள்ளோம், கொரோனா வைரஸின் புதிய திரிபு குறித்த கவலை அதிகரித்து வருகிறது.

கொரோனா வைரஸின் இந்த புதிய திரிபு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட திரிபுகளிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான மரபணு பிறழ்வுகளைக் கொண்டது. இது மிகவும் அச்சுறுத்தக் கூடியது என ஓர் அறிவியலாளர் இதை விவரித்துள்ளார், மற்றொருவரோ தாங்கள் கண்ட திரிபுகளிலேயே இதுதான் மிகவும் மோசமான திரிபு என என்னிடம் கூறினார்.

இது இந்தத் திரிபு தொடர்பான விவரங்கள் வெளிவரத் தொடங்கியிருக்கும் ஆரம்ப நாட்களில் கூறப்பட்டவை. இத்திரிபால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் தென் ஆபிரிக்காவின் ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திரிபு மேற்கொண்டு பரவியிருக்கலாம் என்பதற்கான சில குறிப்புகளைக் காண முடிகிறது.

இந்தப் புதிய திரிபு எவ்வளவு வேகமாக பரவும், கொரோனா தடுப்பூசிகளால் மனிதர்களுக்கு கிடைத்திருக்கும் பாதுகாப்பு அம்சங்களை இது எப்படி கடக்கிறது, இந்த புதிய கொரோனா திரிபை கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என பல கேள்விகள் இப்போது எழுகின்றன.

B.1.1.529 கொரோனா திரிபு குறித்து பல்வேறு ஊகங்கள் வலம் வருகின்றன, ஆனால் வெகுசில தெளிவான விடைகள் மட்டுமே இருக்கின்றன.

B.1.1.529 என்றழைக்கப்படும் இந்த புதிய கொரோனா திரிபுக்கு, உலக சுகாதார அமைப்பு ஒரு புதிய கிரேக்க பெயரை சூட்ட உள்ளது.

"புதிய கொரோனா திரிபில் வழக்கத்துக்கு மாறாக பல்வேறு பிறழ்வுகள் உள்ளன. இது மற்ற கொரோனா திரிபுகளிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளது" என தென்னாப்பிரிக்காவில் உள்ள சென்டர் ஃபார் எபிடமிக் ரெஸ்பான்ஸ் அண்ட் இன்னொவேஷன் என்கிற அமைப்பின் இயக்குநர் பேராசிரியர் டுளியோ டி ஒலிவெரியா கூறினார்.


இந்த கொரோனா திரிபு எங்களை ஆச்சரியப்படுத்துகிறது. இத்திரிபு, அதன் பரிணாம வளர்ச்சியில் மிகப் பெரும் பாய்ச்சலை கண்டுள்ளது. நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிக அளவிலான பிறழ்வுகளை கொண்டுள்ளது என்றும் கூறினார்.

இந்த புதிய கொரோனா வைரஸ் திரிபில் 50 மரபணு பிறழ்வுகள் உள்ளன என்றும், ஸ்பைக் புரோட்டின் இடையில் 30க்கும் மேற்பட்ட பிறழ்வுகள் இருப்பதாகவும் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டார் பேராசிரியர் டுளியோ டி ஒலிவெரியா.

கொரோனா தடுப்பூசிகள் இந்த ஸ்பைக் புரத இழையைத்தான் இலக்கு வைக்கின்றன. அதேபோல மனிதர்களின் உடலுக்குள் ஊடுறுவ கொரோனா வைரஸ் இந்த ஸ்பைக் புரத இழையைத்தான் பயன்படுத்துகின்றது.

மனிதர்களின் உடலோடு முதலில் தொடர்பு கொள்ளும் ரெசப்டாரில் 10 பிறழ்வுகள் உள்ளன. உலகை உலுக்கிய கொரோனா வைரஸின் டெல்டா திரிபிலேயே ரெசப்டார்களில் இரண்டு பிறழ்வுகள் மட்டுமே இருந்தன.

> **❝ கொரோனா வைரஸின் இந்த புதிய திரிபு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட திரிபுகளிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான மரபணு பிறழ்வுகளைக் கொண்டது. இது மிகவும் அச்சுறுத்தக் கூடியது என ஓர் அறிவியலாளர் இதை விவரித்துள்ளார், மற்றொருவரோ தாங்கள் கண்ட திரிபுகளிலேயே இதுதான் மிகவும் மோசமான திரிபு என கூறினார்.**



கொரோனா வைரஸை தோற்கடிக்க முடியாத ஒரு நோயாளியின் உடலிலிருந்து இத்தனை அதிக பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கலாம். பொதுவாக அதிக பிறழ்வுகள் என்றாலே ஆபத்தானவை என்று பொருள் அல்ல, அந்த பிறழ்வுகள் என்ன செய்கின்றன என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

ஆனால் இங்கு பிரச்னை என்னவெனில் சீனாவின் வூஹான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸிலிருந்து, இந்த திரிபு மிகப்பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. அதாவது கொரோனா வைரஸின் ஒரிஜினல் ஸ்டெரயின் என்றழைக்கப்படும். ஆரம்பகால இழைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி கள் B.1.1.529 கொரோனா திரிபுக்கு எதிராக அதிக செயல் திறனற்றுப் போகலாம்.

இந்த புதிய திரிபில் காணப்படும் சில பிறழ்வுகள், ஏற்கனவே வேறு சில பிறழ்வுகளில் காணப்பட்டுள்ளன. எனவே அந்த பிறழ்வுகள் எப்படி செயல்படலாம் என சில விவரங்களை நமக்கு வழங்குகின்றன.

"இந்த கொரோனா வைரஸ் திரிபு பரவும் தன்மையை அதிகரித்திருக்கலாம், ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு வேகமாகப் பரவும் திறனை அதிகரித்திருக்கலாம் என கவலை அளிக்கிறது, ஆனால் இத்திரிபு நோயெதிர்ப்பு மண்டலத்தின் சில பகுதிகளை வெற்றிகரமாக கடக்கலாம்" என தென்னாப்பிரிக்காவில் உள்ள க்வாசுலு நடல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரிச்சர்ட் லெஸ்செல்ஸ் கூறினார்.

காகிதத்தில் மிகவும் அச்சுறுத்த கூடியதாக தோன்றும் பல கொரோனா திரிபுகள், எதார்த்தத்தில் ஒன்றுமில்லாமல் போய் உள்ளன. அதற்கு பல உதாரணங்கள் உள்ளன. கொரோனா வைரஸின் பீட்டா (beta) திரிபு இந்த ஆண்டின் தொடக்கத்தில் மிகவும் அச்சுறுத்த கூடியதாக மக்களின் கவலைக்குரியதாக இருந்தது. அத்திரிபு மனிதர்களின் நோய் எதிர்ப்பு மண்டலத்தில் சிக்காமல் தப்பிப்பதில் சிறந்து விளங்கியது. ஆனால், யதார்த்தத்தில் அதிவேகமாக பரவக்கூடிய டெல்டா திரிபு உலகை தவிக்க வைத்தது.

"பீட்டா திரிபு நோயெதிர்ப்பு மண்டலத்தை கடப்பதில் மட்டுமே சிறந்து




விளங்கியது, ஆனால் டெல்டா (delta) திரிபோ தொற்றுத்தன்மை மற்றும் ஓரளவுக்கு நோய் எதிர்ப்பு மண்டலத்திலிருந்து தப்பிக்கும் திறன் என இரண்டையும் கொண்டிருந்தது. இந்த இரு திறன்களும் கொரோனா வைரஸ் பரவலை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றன" என்கிறார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரவி குப்தா.

ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் இது தொடர்பான தெளிவுகளை வழங்கும். ஆனால், எதார்த்தத்தில் உலகில் பரவும் வைரஸை கண்காணிப்பதன் மூலம் இத்திரிபு தொடர்பான விடை விரைவாகக் கிடைக்கும். இது அரம்ப கட்டம் என்பதால், இப்போது எந்த ஒரு முடிவுக்கும் வர முடியாது.

தென்னாப்பிரிக்காவின் கௌடெங் மாகாணத்தில் 77 பேரும், போட்ஸ்வானாவில் நான்கு பேரும், ஹொங்கொங்கில் ஒருவரும் இத்திரிபால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அனைவரும் தென்னாபிரிக்கா உடன் பயணத் தொடர்புடைய வர்களாக உள்ளனர்.

இத்திரிபு இன்னும் பரவலாக பரவியிருப்பதற்கான குறிப்புகள் உள்ளன. இந்த திரிபை முழுமையான மரபணு சோதனை செய்யாமல், நிலையான பரிசோதனைகளிலேயே (Standard Test) இந்த திரிபை கண்டுபிடிக்க முடியும்.

இச்சோதனையில் கௌடெங் மாகாணத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களில் 90% பேர் இத்திரிபால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும், மற்ற மாகாணங்களிலும் இத்திரிபு பரவியிருக்கலாம் என்றும் இச்சோதனை பரிந்துரைக்கிறது.

டெல்டா திரிபை விட இத்திரிபு அதிவேகமாக பரவக் கூடியதா, அதன் தீவிரத்தன்மை என்ன, தடுப்பூசிகளால் கிடைக்கும் பாதுகாப்பை இத்திரிபால் எந்த அளவுக்கு கடக்க முடியும் என்பதை எல்லாம் அச்சோதனை நமக்கு வெளிப்படுத்தாது.

மேலும், அதிகம் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ள நாடுகளில் இத்திரிபு எப்படி பரவும் என்பது குறித்த தகவல்களையும் வெளிப்படுத்தாது. தென்னாப்பிரிகாவில் 24% பேர் மட்டுமே முழுமையாக கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டனர் என்றாலும், அந்நாட்டில் பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திரிபை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும், அதோடு என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என ஆழமாக கேள்விகளைக் கேட்க வேண்டும். நமக்கு எல்லா விடைகளும் கிடைக்கும் வரை நாம் காத்திருக்க முடியாது என்பது இந்த பெருந்தொற்றில் நாம் கற்றுக் கொண்ட பாடம்.

பி.பி.சி. ■


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

❖ **18, 19 ஆகிய வினாக்களிற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விழுந்த தாயக்கட்டையினைக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**






18) இத்தாயக்கட்டையில் ★ இக்குறியீட்டிற்கு எதிரே உள்ள குறியீடாக இருக்கக்கூடியது எது?

1) ▲　　2) ✥　　3) ✚

19) இத்தாயக்கட்டையில் எதிர்ப்பக்க முகங்களைச் சரியாகக் காட்டும் குறியீடுகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க?

1) ● = ■　　2) ▲ = ■　　3) ★ = ✚

20) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் (கை எடுக்காமல்) வரையக்கூடிய உருவைத் தெரிவு செய்க?

1) 
2) 
3) 

21) பின்வரும் கூற்றுக்கள் ஒரு செயற்பாட்டின்போது நடைபெற்றவைகளாகும். அவை ஒழுங்குமுறையின்றி உள்ளதனால் அவற்றை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க?

**அ.** அதன்பின்னர் அம்மாவுடன் சந்தைக்குச் சென்றேன்.

**ஆ.** இருபது நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தேன்.

**இ.** இன்று ஞாயிற்றுக்கிழமை தாமதமாக எழுந்தேன்.


**ஈ.** அதன்பின்னர் அம்மாவிற்கு உதவினேன்.



**உ.** காலை உணவு தோசை அது எனக்கு மிகவும் பிடிக்கும்.

**ஊ.** அம்மா காலை உணவைத் தந்தார்.

1) இ,ஆ,ஈ,ஊ,உ,அ　　2) இ,ஆ,ஈ,ஊ,அ,உ　　3) இ,ஈ,ஆ,உ,ஊ,அ

22) சதுரவடிவத் தாளொன்றை இரண்டு தடவைகள் மடித்து புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது தோன்றும் உருவினைத் தெரிவு செய்க?







1) 
2) 
3) 

23) சக்திகா புத்தகமொன்றில் 100 ஆம் பக்கத்திலிருந்து 121 ஆம் பக்கம் வரை தொடர்ச்சியாக வாசித்தாள் ஆயின் சக்திகா வாசித்த பக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 21　　2) 20　　3) 22


24) தரப்பட்டுள்ள கோலத்தினை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க?


……………………..

1) 
2) 
3) 

25) நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றிற்கு ஒவ்வொரு 3 மணித்தியாலத்திற்கும் 1*l* 500*ml* மண்ணெண்ணெய் தேவை. அவ் இயந்திரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இயங்குவதற்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவு யாது?

1) 4*l* 500*ml*　　2) 5*l*　　3) 3*l* 500*ml*

26) 


A பெட்டியினுள் B அளவிலான எத்தனை பெட்டிகளை உள்ளே வைக்க முடியும்?

1) 12　　2) 20　　3) 24

27) கீழே தரப்பட்ட நிகழ்வை வாசித்து பொருத்தமான எதிர்வுகூறலைத் தெரிவு செய்க.

- **நிசாந் பாடசாலை விட்டு வீடு செல்லும்போது பார்வை இழந்த ஒருவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரம் நிற்பதைக் கண்டான். அந்நேரம் நிசாந் செய்யக்கூடியது?**

1) அவரைப் பார்த்ததும் பார்க்காதது போல் செல்லல்.
2) அவர் வீதியைக் கடந்து செல்ல உதவி செய்தல்.
3) அவரைப் பார்த்து நகைத்துச் செல்லல்.

# அரசின் செயல்களால் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியில்!

கொழும்பு, நவ. 27

அரசின் செயல்பாடுகள் தொடர்பில் ஆளுங்கட்சியிலுள்ள மூத்த அரசியல்வாதிகள் சிலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். சாதகமான பல வழிமுறைகள் இருந்தும், மீண்டும் மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கும் விதத்தில் அரச மேல் மட்டம் முடிவுகளை எடுப்பதாலும், சில உறுப்பினர்கள் பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிட்டுவருவதாலும், மேலும் சில காரணங் களாலுமே அவர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர் என அறியமுடிகின்றது.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் சந்திர வீரக்கொடி ஆகியோர் தற்போது அரசை வெளிப்படையாகவே விமர்சித்துவருகின்றனர். மேலும் சில இன்னும் வெளிப்படையாக விமர்சனக் கணைகளைத் தொடுக்காவிட்டாலும், தமக்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திவருகின்றனர்.

பங்காளிக்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் அரசுக்கு கடும் நெருக்கடி கொடுத்துவரும் நிலையில், மொட்டு கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்களும் தற்போது போர்க்கொடி தூக்கியுள்ளமை தெற்கு அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சியிலிருந்து 40 பேர் வெளியேறத் தயாராகி வருகின்றனர் என்ற தகவலை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவும் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

உடனடியாக இவர்கள் அரசிலிருந்து வெளியேறாவிட்டாலும்கூட தக்க தருணம்வரும் போது அதிரடியான நகர்வுகளை கையாளக்கூடும் எனவும் தெரியவருகின்றது. (அ)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## மின்சார சபை பொறியியலாளர் சங்கம்

கொழும்பு, நவ. 27

தாம் முதற்கட்ட நடவடிக்கையையே ஆரம்பித்துள்ளதாகவும் மேலும் இரண்டு வழிமுறைகள் தங்களது சங்கத்தால் அமுல்படுத்தப் படவுள்ளதாகவும் 'சட்டப்படி வேலை செய்யும்' தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.



அரசாங்கத்துக்கு சொந்தமான யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிராகவும், மின்சார சபையில் நிலவும் பிரச்னைகளை முன்னிறுத்தியும் இந்த சட்டப்படி வேலைசெய்யும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் இந்த தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தங்களது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கபெறும் வரை இந்த தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்துள்ளார். (அ)

# தென்மராட்சியில் டெங்கு அபாயம்

யாழ்ப்பாணம், நவ. 27

தென்மராட்சி பிரதேசங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகளின் அடர்த்தி அதிகரித்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ள நிலையில் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் எச்சரித்துள்ளனர்.



இது குறித்து சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் நாட்களில் டெங்குக் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அண்மைய நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளின் ஊடாக இது கண்டறியப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிராமிய டெங்கு ஒழிப்புக் குழுக்களின் செயற்பாட்டை வலுப்படுத்தவும், பொதுமக்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தவும், நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அழிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சகல கிராமமட்ட உத்தியோகத்தர் களிடமும் அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றனர். (அ)

# அரசிலிருந்து சுதந்திரக் கட்சி தாராளமாக வெளியேறலாம்

## மைத்திரிக்கு பெரமுன பதிலடி



கொழும்பு, நவ. 27

**"அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வெளியேறினால் எமக்கு பரவாயில்லை, எவ்வித பிரச்னையும் ஏற்படப்போவதில்லை." _ என்று மொட்டு கட்சி உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று தெரிவித்தார்.**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெளியிட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரொஷான் ரணசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில் - எனக்கு கோள்மூட்டும் அரசியல் செய்ய தெரியாது. மைத்திரி தரப்புக்கு அது பழக்கமாக இருக்கலாம். தங்கள் அடி 'வேறுமாதிரி' இருக்கும் என அவர் சொன்னார். சஹ்ரானின் அடியை நாம் பார்த்தோம். மீண்டும் அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறக்கூடாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. அதேபோல அக்கட்சியில் இருந்து உறுப்பினர்கள் சிலர் வெளியேறுவதால் சிக்கலும் இல்லை - என்றார். (அ)

# சுதந்திரக் கட்சியை சீண்டவேண்டாம்!

## பெரமுனவுக்கு தயாசிறி எச்சரிக்கை

கொழும்பு, நவ.27

அனைத்தையும் தெரிந்துகொண்டு குழந்தைகளை போன்று பொய் கூறக்கூடாது. சேற்றைக் கிளறினால் துர்நாற்றமே வெளியில் வரும். அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ள சிலர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தொடர்ந்து சேறு பூசும் வகையில் செயற்பட்டால் அரசாங்கம் விரைவாக நெருக்கடியை சந்திக்க நேரிடும் என பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் - மஹிந்தானந்தவினால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. கடந்த அரசாங்கம் இறுதி வருடத்தில் 370 கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாகவும், ஆனால் 2020ஆம் ஆண்டடில் தற்போதைய ஜனாதிபதி 170 கோடி ரூபாய் மாத்திரமே செலவினங்களுக்காக பயன்படுத்தியுள்ளதாக மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு கிராம சக்தி வேலைத்திட்டத்துக்கு மாத்திரம் 200 கோடி ரூபாய் நிதி செலவு செய்திருந்தோம். அதன் பின்னர் உணவு உற்பத்திக்கு 50கோடி ரூபாய் செலவு செய்திருந்தோம். 2019ஆம் ஆண்டு கிராம சக்தி வேலைத்திட்டத்துக்காக 400 கோடி ரூபாய் செலவு செய்திருந்தோம்.

அதன்படி பார்க்கும்போது பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கிராம சக்தி வேலைத்திட்டம் நாடுபூராகவுமுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இன்று அந்த வேலைத்திட்டங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறாயின் அந்த வேலைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக நீக்கப்படும்.

சிறுநீரக நோயாளர்களுக்காக கடன் வாங்காமல் நன்கொடை பெற்று பொலனறுவையில் வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அந்த வைத்தியசாலை திறக்கப்படவில்லை. இதுவே இன்றைய நிலைமை. சுற்றாடல் பாதுகாப்புக்காகவும் பல்வேறு வேலைத்திட்டங்கள், போதைப் பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம், 5 ஆணைக்குழுக்கள் போன்றனவும் செயற்பட்டன. இவற்றுக்காகவும் நிதி செலவிடப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அதற்கு முன்னர் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நடவடிக்கைகள் இடம்பெற்றன. பண்டாரநாயக்கவுக்கு பின்னர் அரசாங்கத் தரப்பில் தவறு செய்த எம்.பி. ஒருவரை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றுவதற்கு கடந்த ஜனாதிபதி ஒருவரே நடவடிக்கை எடுத்திருந்தார் என்பதை மறந்துவிட வேண்டாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கும் தனியான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. ஆகவே, 370 கோடி ரூபாய் நிதியை அநாவசியமாக செலவு செய்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கிறோம். எங்களுக்கு யாரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆனால், நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தோம். ஆனால், அதிகாரத்தை பெற்றுக் கொண்டு முழு அதிகாரத்தையும் பாராளுமன்றத்துக்கே வழங்கினார்கள்.

மக்களின் நம்பிக்கைக்காகவே 2018 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை நாட்டின் பிரதமராக்கினர் என்பதை மறந்துவிட வேண்டாம். அதனால், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது அவதானமாக இருக்க வேண்டும். கடந்த ஆட்சியின் போது ஜனாதிபதி 200 வாகனங்களை பயன்படுத்தியதாக மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார். ரோஹித அபயகுணவர்தன எம்.பி. அவரின் உரையில் கடந்த ஆட்சியின் போது ஜனாதிபதி 386 வாகனங்களை பயன்படுத்தியதாக தெரிவிக்கின்றார். இந்த கருத்தில் எது உண்மை.

தற்போதைய ஜனாதிபதி 3 வாகனங்களையே பயன்படுத்துகின்றார். அது சிறந்த விடயம். ஆனால், வாகனங்களை பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு வரையறைகள் இருக்கின்றன. இது யாவரும் அறிந்ததே. எதுவும் தெரியாத குழந்தைகளை போன்று பொய்கூற கூடாது.

இவ்வாறான கருத்துகளை முன்வைக்கும்போது பொறுப்புடன் சிந்தித்து உரையாற்ற வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் பேசினால் பல்வேறு பிரச்சினைகள் குறித்து உரையாற்ற முடியும். அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறான விடயத்தை தெரிவித்தது இது முதல் தடவையல்ல. ஒரிரு தடவைகளில் இதனை நிறுத்தினால் பிரச்சினையில்லை. நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவருக்கு சேறு பூசும் போது எங்களால் பொறுமையாக இருக்க முடியாது.

நாட்டில் மஹிந்தானந்த அளுத்கமகே மயிலைபோன்று ஆடிக்கொண்டிருக்கின்றார். மஹிந்தானந்த சேற்றை கிளறிக் கொண்டிருக்கிறார். தொடர்ந்து கிளறினால் துர்நாற்றமே வெளியில் வரும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். தாக்க வேண்டுமென்றால் நேரடியாக மோதுங்கள். எங்கள் கட்சி தலைமையின் மீது பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம். அவ்வாறு செயற்பட்டால் பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும். இவ்வாறான கருத்துகள் தொடர்பில் சபாநாயகரும் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)



# ரஷ்ய சுரங்க விபத்தில் மரணம் 52 ஆக உயர்வு!

மொஸ்கோ, நவ. 27

ரஷ்யாவின் சைபீரியாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 52ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்து கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு ரஷ்யாவில் ஏற்பட்ட மிக மோசமான சுரங்க விபத்தாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலிருந்து சுமார் 3,500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லிஸ்ட்வேஸ்னியா என்ற சைபீரிய சுரங்கத்தில் காற்றோட்டத்துக்காக சுரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த வாயிற் குழியில் படிந்திருந்த நிலக்கரித் துகள்களில் தீ பற்றி விபத்து ஏற்பட்டது.

அவசர உதவி சேவையைச் சேர்ந்த ஓர் அதிகாரி, சுரங்கத்துக்குள் சிக்கியவர்களில் யாரும் உயிரோடு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

லிஸ்ட்வேஸ்னியா சுரங்கத்தின் இயக்குநர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பிராந்திய ஆய்வுக் குழு கூறியுள்ளது. 49 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேரின் நிலை மிக மோசமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# டெல்டா வைரஸைவிட வீரியமான புதிய திரிபு தென்னாபிரிக்காவில்!

கேப்டவுன், நவ. 27

'டெல்டா' வைரஸ் திரிபை விட வீரியம் மிக்க கொரோனா வைரஸ் திரிபு தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதையடுத்து உலகளாவிய கோவிட் அச்சுறுத்தல் நிலை மீளவும் அதிகரித்துள்ளது.

இந்தப் புதிய திரிபு, வேகமாகப் பரவும் தன்மை வாய்ந்தது என்று அந்த நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்தார். ஏற்கெனவே பி.1.1.529 என வகைப் படுத்தப்பட்ட புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டதாக தேசிய தொற்று நோய் நிறுவனம் உறுதிப்படுத்திய நிலையில், அமைச்சரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

உருமாறிய கொரோனா வைரஸ் குறித்து தென்னாபிரிக்க சுகாதாரத் துறை அமைச்சர் ஜோ பாஹ்லா செய்தியாளர்களிடம் வியாழக் கிழமை கூறுகையில்,

நாட்டில் கொரோனா 4ஆம் அலை வரும் டிசம்பர் அல்லது ஜனவரியில் தாக்கலாம். ஆனால், இந்த புதிய வகை வைரஸ் நோய்த்தொற்று பரவலை அதிகரித்து வருகிறது. கௌடெங் போன்ற மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த மாகாணங்களில் தொற்றுப் பரவல் அதிகரித்தாலும், அது டெல்டா வைரஸின் பிரிவுதான் என்பதால் அதை கட்டுப்படுத்திவிடலாம் என ஆரம்பத்தில் நாங்கள் நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால், இப்போது உருமாறிய புதிய வகை வைரஸ் பரவுவதை தெளிவாக அடையாளம் கண்டுவிட்டோம். நாம் எதிர்கொள்ளும் கண்ணுக்குப் புலனாகாத எதிரியை முன்கூட்டியே கணிப்பது மிகவும் சிரமம்.



பொருளாதார மையமான கௌடெங் நோக்கி தென்னாபிரிக்காவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர்.

ஆகையால், அடுத்த சில நாள்களில் நோய்த்தொற்றுப் பரவலின் வீதம் அதிகரிக்க தொடங்கலாம். தென்னாபிரிக்க அரசும், கொரோனா கட்டுப்பாட்டு சபையும் வார இறுதி நாள்களில் சந்தித்து, உருமாறிய வைரஸின் உட்கூறுகள் குறித்தும், நோய்த் தொற்றுப் பரவல் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளும் என்றார்.

தென்னாபிரிக்காவில் கடந்த வாரம் வரை சராசரியாக 100 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிவந்த நிலையில், புதன்கிழமை 1,200 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. அந்நாட்டில் இதுவரை 30 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா வைரஸ் பாதிப்புக் குள்ளாகியிருக்கின்றனர். ஆபிரிக்க கண்டத்திலேயே அதிகபட்சமாக இங்கு 9 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பச்சை கண்கள் மூலம் புகழ்பெற்ற அகதி பெண் இத்தாலியில் தஞ்சம்!

ரோம், நவ. 27

1984ஆம் ஆண்டு நஷனல் ஜோகிரபிக் இதழின் முகப்பு பக்கத்தில் இடம் பெற்று புகழ்பெற்ற பச்சை கண்கள் கொண்ட ஆப்கான் பெண் ஷர்பத் குல்லா இத்தாலியில் தஞ்சமடைந்துள்ளார்.



ஆப்கானிஸ்தான் நாட்டின் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அந்த நாட்டு மக்கள் பலர் வெளியேறி பல நாடுகளில் தஞ்சமடைந்துள்ளது.

ஷர்பத் குல்லா 1984ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் அகதியான இவரை புகைப்படக் கலைஞர் ஸ்ரீப் மெக்கரி படம் பிடித்தார். பச்சை கண்கள் கொண்ட அவரின் படத்தை நஷனல் ஜோக்கிரபிக் சஞ்சிகை முகப்பு பக்கத்தில் வெளியிட்டது. இதனால், அவர் சர்வதேச புகழ் பெற்றார்.

2014இல் குல்லா பாகிஸ்தானில் குடியேறியிருந்தார். ஆனால், அவர் போலி பாகிஸ் தான் அட்டைகளை வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் நாடு கடத்தப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் காபூல் சென்ற அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், வீடு ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியபோது விமானம் மூலம் வெளியேறிய ஆப்கானியர்களுக்கு சில நாடுகள் தஞ்சமளித்தன. இதில் இத்தாலியும் ஒன்று.

அந்த நாடு குல்லாவுக்கும் தஞ்சமளித்துள்ளது. (ஐ)

# புதிய வைரஸ் பரவல் எதிரொலி 6 நாடுகளுக்கு பிரிட்டன் தடை!

லண்டன், நவ. 27

தென்னாபிரிக்காவில் புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதையடுத்து, ஆபிரிக்க கண்டத்தின் 6 நாடுகளுக்கு பிரிட்டன் தடை விதித்துள்ளது.

பிரிட்டனில் கொரோனா தொற்றால் 2 அலைகள் வந்து ஓய்ந்துவிட்ட நிலையில் 3ஆவது அலை தொடங்கியுள்ளது. பிரிட்டனில் உள்ள பெரும்பாலான மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தியும்கூட மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நாள்தோறும் 40 ஆயிரத்துக்கும் குறையாத மக்கள் தொற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் தென்னாபிரிக்காவில் புதிய வகை கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அந்த மண்டல நாடுகளில் இருந்து வருவோருக்கு பிரிட்டன் தடை விதித்துள்ளது. (ஐ)



# லிபிய தேர்தலில் போட்டியிட கடாபியின் மகனுக்கு தடை!

திரிபோலி, நவ. 27

லிபியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட, அந்த நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி கடாபியின் மகன் சயீஃப் அல்-இஸ்லாமுக்கு தேர்தல் ஆணைக்குழு தடை விதித்தது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தகுதியில்லாதவர்களின் பட்டியலை லிபியா தேர்தல் ஆணைக்குழு புதன்கிழமை வெளியிட்டது. அதில், சயீஃப் அல்-இஸ்லாமின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

கடாபியின் ஆட்சிக் காலத்தின்போது அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட குற்றத்துக்காக திரிபோலி நீதிமன்றம் சயீஃபுக்கு மரண தண்டனை விதித்தது. மேலும், அவர் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டார் என்று சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது. இந்தச் சூழலில், அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை எதிர்த்து சயீஃப் அல்-இஸ்லாம் மேல்முறையீடு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொரோனா தொற்று பரவலால் ஜேர்மனியில் 100,000 பேர் பலி!

பெர்லின், நவ. 27

ஜேர்மனியில் கொரோனா தொற்றுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்தது.

நேற்றுவரை ஜேர்மனியில் ஒரு இலட்சத்து 614 பேர் உயிரிழந்தனர். இதுதவிர நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 33 ஆயிரத்து 679 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 55 இலட்சத்து 80 ஆயிரத்து 594ஆக உயர்ந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜேர்மனியில் வியாழக்கிழமை நிலவரப்படி, 47 இலட்சத்து 44 ஆயிரத்து 400 கொரோனா நோயாளிகள் தொற்றிலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



மேசியின் நன்றி செலுத்தும் அணி வகுப்பு நேற்ற நியூயோர்க்கில் இடம்பெற்றது. வண்ணமயமான பொம்மை பலூன்கள் வானில் பறந்து ஆயிரக்கணக்கானவர்களை மகிழ்வித்தன. 95ஆவது ஆண்டாக இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் நியூசிலாந்து அபார தொடக்கம்!



## ஸ்ரேயாஸ் ஐயர் கன்னி சதம்

கான்பூர், நவ. 27

ஸ்ரேயாஸ் ஐயர் கன்னி சதம் அடித்து அசத்திய போதும் முதல் இனிங்ஸில் இந்திய அணி 345 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணிக்கு தொடக்க வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வருகின்றனர். இதனால், நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் விக்கெட் இழப்பின்றி 129 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் இருந்தது.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து அணி இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில், முதல்போட்டி கான்பூரில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 4 விக்கெட்கள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஸ்ரேயாஸ் ஐயர் 75 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 50 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர். இரண்டாம் நாளான நேற்று தொடங்கிய ஆட்டத்தில் சிறிது நேரத்திலேயே ஜடேஜா மேலதிகமாக எந்த ஓர் ஓட்டத்தையும் பெறாமலே ஜடேஜா ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த விரித்திமன் ஷா ஓர் ஓட்டத்துடன் விக்கெட்டை பறிகொடுத்தார். இதனிடையே கன்னிச் சதமடித்த ஸ்ரேயாஸ் ஐயர் 13 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 105 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தவர்களில் ரவிச்சந்திரன் அஸ்வின் மட்டுமே ஓரளவு தாக்குப் பிடித்தார். எனினும், அவர் 38 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார்.

இதைத் தொடர்ந்து 11.1 ஓவர்களில் 345 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி.


நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் ரிம் சௌதி 5, கைல் ஜமைசன் 3, அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

நியூசிலாந்து அணி பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

ரொம் லதாம், வில் யங் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் இந்திய பந்துவீச்சாளர்களை அபாரமாக எதிர்கொண்டனர். இதனால், இருவரும் அரைச்சதங்களை கடந்து அசத்தினர்.

நியூசிலாந்து அணி 57 ஓவர்களை எதிர்கொண்ட நிலையில் விக்கெட் இழப்பின்றி 129 ஓட்டங்களைப் பெற்றது. லதாம் 50 ஓட்டங்களுடனும், வில் யங் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# ஆஸி. டெஸ்ட் அணியின் தலைவராக கம்மின்ஸ்!


சிட்னி, நவ. 27

ஆஷஷ் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலியா டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸையும், உப தலைவராக ஸ்டீவ் ஸ்மித்தையும் நேற்று நியமித்தது.

கடந்த வாரம் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவர் பதவியிலிருந்து ரிம் பெய்ன் இராஜினாமா செய்தார். இதையடுத்து இந்த நியமனம் வந்துள்ளது.

இதன் மூலம் 28 வயதான பட் கம்மின்ஸ் அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் 47 ஆவது தலைவராகிறார். இதன்மூலம், 1956ஆம் ஆண்டின் பின்னர் வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் அணியின் தலைவராகியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் பெண் சக ஊழியருடன் பாலியல் ரீதியான குறுஞ்செய்திகள் பகிர்வு தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்காக தஸ்மேனிய விக்கெட் காப்பாளரும் டெஸ்ட் தலைவருமான ரிம் பெய்ன் ஒரு வாரத்திற்கு முன்பு பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# டில்லி கப்பிட்டல்ஸ் தக்கவைக்கும் வீரர்களின் விவரம் வெளியானது

புதுடில்லி, நவ. 27

டில்லி கப்பிட்டல்ஸ் அணி தக்கவைத்துள்ள நான்கு வீரர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். தொடரில் இரு அணிகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இதனால், வீரர்களுக்கான ஏலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பழைய அணிகள் 4 வீரர்களை தக்க வைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், டில்லி கப்பிட்டல்ஸ் அணி தக்கவைத்துக்கொள்ளும் வீரர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன. அணியின் தலைவராக ரிஷப் பந்த் தொடரவுள்ளார்.

ரிஷப் பந்த், பிருத்வி ஷா, அக்ஷர் பட்டேல், அன்ரிச் நோர்ட்ஜே ஆகியோரையே டில்லி அணி தக்கவைத்துள்ளது. டில்லி அணியின் தலைவராக இருந்த ஸ்ரேயாஸ் ஐயர் ஏலத்தில் பங்கேற்க முடிவு செய்துள்ளார். இதனால், அவரை அணியால் தக்க வைக்க முடியவில்லை.

இரு அணிகளில் ஓர் அணி ஸ்ரேயாஸ் ஐயரை தலைவராக தெரிவு செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# பெல்ஜியம் கோல் மழை

## 19 - 0 என்ற கணக்கில் வீழ்ந்தது ஆர்மீனியா

யேரேவன்,நவ. 27

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதி போட்டியில் பெல்ஜியம் அணி 19 -0 என்ற கோல் கணக்கில் ஆர்மீனியாவை வீழ்த்தியது.

ஆர்மீனியாவில் நடந்த இந்தப் போட்டியில், டெஸ்லா வுல்லர்ட் ஐந்து கோல்களை அடித்து அசத்த, அம்பர் டிசியாக், டைன் டி கெய்க்னி ஆகியோர் ஹட்ரிக் கோல் அடித்து அசர வைத்தனர்.

ஜானிஸ் கேமன், ஹென்னா யூர்லிங்ஸ், ஜோர்ன் டியூலிங்ஸ் ஆகியோர் இரு கோல்களையும் ஜஸ்ரின் வான்ஹேவர்மேட் மற்றும் சாரா விஜ்னென்ட்ஸ் ஆகியோரும் கோல் அடித்தனர்.

எனினும், பெல்ஜியத்தின் இந்த கோல் மழை ஒரு சாதனை வெற்றியல்ல. ஏனெனில், பெண்களுக்கான சர்வதேச போட்டிகளில் 21 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்ற நான்கு சந்தர்ப்பங்கள் அமைந்துள்ளன.

ஜப்பான் அணி குவாம் அணியையும், கனடா அணி போர்ட்டோரிக்கோவையும், நியூசிலாந்து சமோவாவையும், அவுஸ்திரேலியா மேற்கு சமோவாவையும் இவ்வாறு வீழ்த்தின. இருப்பினும் இது 1990ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





# சகல போட்டிகளிலிருந்தும் ரிம் பெய்ன் தற்காலிக ஓய்வு

சிட்னி, நவ. 27

சகல விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஆஸி. அணியின் விக்கெட் காப்பாளர் ரிம் பெய்ன் தற்காலிக ஓய்வை அறிவித்துள்ளார்.

2018இல் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் 46 ஆவது தலைவராக விக்கெட் காப்பாளர் ரிம் பெய்ன் நியமிக்கப்பட்டார். 2019 ஆஷஷ் தொடரில் கிண்ணத்தைத் தக்கவைக்க உதவினார். பாலியல் விவகாரம் தொடர்பான சர்ச்சையில் சிக்கியதால் அவர் தலைமை பதவியிலிருந்து விலகினார்.

இந்த நிலையிலேயே தற்காலிக ஓய்வை அறிவித்துள்ளார். ஆஷஷ் தொடரில் ஒரு வீரராக இடம்பெறுவேன் என்று தெரிவித்த அவர் அணியில் தான் தொடர்வது அணிக்கு தொந்தரவாக இருக்கும் இதனாலேயே தற்காலிகமாக ஓய்வு பெறுகிறேன் என்று கூறியுள்ளார்.

இதனால், அவர் ஆஷஷ் போட்டிகளிலிருந்து விலகியுள்ளார். அத்துடன், அவர் எப்போது மீண்டும் விளையாட வருவார் என்று தெரியவில்லை. இதற்கு பிறகு அவரால் விளையாட முடியுமா என்றும் சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் அவருக்கு தற்போது 36 வயது ஆகிவிட்டது. இதனால், அவர் மீண்டும் வருவது சந்தேகமே என்ற கருத்தும் நிலவுகின்றது. (ஐ)

# முகவரியில்லாது தபாலில் வந்தது போதைப்பொருள்



கொழும்பு, நவ. 27

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மத்திய தபால் பரிவர்த்தனையின் பண்டஅனுமதி பிரிவில் வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட சந்தேகத்துக்கிடமான 10 பொதிகளைச் சோதனையிட்டபோது, அதிக விலை உயர்ந்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பொதிகள் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து இலங்கையில் கொழும்பு, அஹங்கம, பிலியந்தலை மற்றும் கண்டி நகரங்களைச் சுட்டிக்காட்டி போலியான முகவரிகளுக்கு அனுப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட 10 பொதிகளிலும் சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதிமிக்க ஒரு கிலோ 300 கிராம் எடையுள்ள இலங்கையில் பயன்பாட்டில் இல்லாத குஷ் எனப்படும் கஞ்சா போதைப்பொருள் இருந்தமை தெரியவந்துள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

போதைப்பொருள் மீட்பு தொடர்பாக சுங்கத்துறையின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதி அதிகாரி நுவன் அபேசிங்க தகவல் வழங்கினார். (இ)

# தொடரும் சீரற்ற காலநிலையால் முல்லைத்தீவில் ஒருவர் மரணம்

## தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் பல குடும்பங்கள் இடைத்தங்கல் முகாமில்



முல்லைத்தீவு, நவ. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் கனமழை மற்றும் அனர்த்தம் காரணமாக ஒருவர் உயிரிழந்தார் அத்துடன், 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகின்றது.

இந்நிலையில், தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கனமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் வீடுகள் சிலவற்றுக்குள் வெள்ளம் புகுந்து காணப்படுவதோடு வயல் நிலங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. இதன்காரணமாக பல்வேறு குடும்பங் கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் கனமழை மற்றும் அனர்த்தம் காரணமாக கரைதுறைப் பற்று பிரதேச செய லாளர் பிரிவில் 5 குடும் பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும், மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாகண்டல் பகுதியில் மரணம் ஒன்றும் பதிவாகியுள்ளது.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல குளங்கள் வான் பாய்ந்து வருகின்றனர் எனவும் கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மழை காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆனந்தபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் அவர்களுடைய வீடுகளில் இருந்து இராணுவத்தினரால் படகு மூலம் கொண்டு வரப்பட்டு ஆனந்தபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (இ)

# நல்லாட்சி அரசாங்கத்தால் நாட்டுக்குப் பெரும் நட்டம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 27

"நல்லாட்சி அரசின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால், 11 ஆயிரத்து 50 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்டுநாயக்க விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் தாமதமடைந்ததன் காரணமாக, அது நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதித்துள்ளது.

அசல் வடிவமைப்பில் முன்மொழியப்பட்டுள்ள கட்டடத்தின் கூரையில் தாமரை மலரின் வடித்துக்குப் பதிலாக, இலை வடிவிலான கூரையை அமைப்பதற்கு நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்ததால், 2016ஆம் ஆண்டு இதற்காக 661 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்துக்காக ஜப்பான் அரசு வழங்கிய 334 மில்லியன் ஜப்பானிய யென், முதல் கடன் தொகையானது 30 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கடன் தொகையை அடுத்த வருடத்திலிருந்து செலுத்துவதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசின் பொறுப்பற்ற செயல்பாடு காரணமாக, விமான நிலையத் திட்டம் நிறைவடைவதற்குள், தற்போதைய அரசு இந்தக் கடனைச் செலுத்துவதற்கு ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டன.

600கோடி ரூபா முதலீட்டில் இந்தத் திட்டம் 2015ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தத் திட்டமானது 2014 ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எனினும், 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், விமான நிலைய விரிவாக்கல் திட்டத்தின் விரிவாக்கத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தாமதமாகியது.

தொடர்ச்சியாகத் தாமதப்படுத்தப்பட்டு வந்த இந்நிலையத்தின் கட்டுமானப் பணிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் துரிதப்படுத்தப்பட்டதுடன் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# பொலிஸாரை தாக்கிய 6 பேர் கைதாகினர்!

கொழும்பு, நவ. 27

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இராஜகிரிய பிரதேசத்தில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி தர்மபுரம் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலைச் சமரசம் செய்யச் சென்ற தர்மபுரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவைச் சந்தேகநபர்கள் தாக்கியுள்ளனர்.

இதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும், தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்ய பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில், இராஜகிரியவில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த 6 பேர் மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (அ)

DAN CINE MARATHON

மாபெரும் குறும்படப் போட்டி

இது நமது திரைத்துறை கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில் கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :

075 313 2901, 075 313 2932, 076 921 3686

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு 'சிலோன் மீடியா போரம்' கடும் கண்டனம்

அம்பாறை, நவ. 27

"ஊடக அடக்குமுறைகளும், ஊடகவியலாளர்களை தாக்கும் செயற்பாடுகளும் அனுமதிக்க முடியாதவை. அண்மையில் நாட்டை உலுக்கிய கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பால விபத்தையடுத்து இடம்பெற்ற போராட்டங்களின்போது செய்தி சேகரிக்கச் சென்ற திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் மூவர் தாக்கப்பட்டதோடு அவர்களது ஊடகக் கருவிகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட ஊடகவியலார்களுக்கு நீதி கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்."

- இவ்வாறு சிலோன் மீடியா போரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அசௌகரியங்களை தாங்கிக்கொண்டு தமது ஊடகப் பணியினை மேற்கொண்டு மக்களின் ஏக்கங்களையும், பிரச்னைகளையும், தேவைகளையும், பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளையும் உலகறியச் செய்வதற்காகக் களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த நிலையிலேயே இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டி ருக்கின்றது.

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தவாறு களப் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு எவ்வேளையிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஊடகப்பணியை தடையின்றி நிறைவேற்ற உரிய சூழல் நாட்டின் சகல ஊடகவியலார்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்டஈடும் நிவாரணமும் வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையும் முன்வைக்கின்றோம்" - என்றுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# பெண்களை இழிவாகப் பேசுகின்ற எம்.பியை இடைநிறுத்த வேண்டும்

## மக்கள் சக்தி அமைப்பு வலியுறுத்து



**கொழும்பு, நவ. 27**

**"பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர் பெண்களை அவதூறாக அல்லது இழிவாகப் பேசுவாராயின் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து 3 மாதங்கள் பாராளுமன்ற அமர்வுகளில் இருந்து இடைநிறுத்த வேண்டும்."**

- இவ்வாறு மக்கள் சக்தி அமைப்பின் செயலாளர் பிரியந்த விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"உலகளவில் தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் வாய்மூல அவதூறுகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் நாட்டின் உயர்பீடமான பாராளுமன்றத்திலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது பெரும் பாதிப்புக்கு வழிவகுக்கும்.

உலகளாவிய ரீதியாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராகதுன்புறுத்தல்களும், வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட் டுள்ளன.

இதற்கு எதிராக 1991ஆம் ஆண்டு வுமன்ஸ் க்ளோபல் லீடர்ஷிப் இன்ஸ்ரிடியூட், எனப்படும் செயல்பாட்டாளர்களால் அமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்பின்னர் நவம்பர் 25ஆம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சர்வதேச தினமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16 நாட்களுக்கு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் முன்னெடுக் கப்படும்.

பாலின ரீதியான வன்முறைகளைத் தடுப்போம் என்ற தொனிப்பொருளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் யுனிடெக் என்ற அமைப்பின் ஊடாக 2030ஆம் ஆண்டுக்குள் வன்முறைகள், துன்புறுத்தல்கள், சித்திரவதைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" - என்றார். (இ)



# வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!

தம்புள்ளை, நவ. 27

தம்புள்ளையில் வெடிபொருட்களுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பகொல்ல பிரதேசத்தில் தம்புள்ளைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அனுமதிப் பத்திரமின்றி 8 கிராம் 710 மில்லிகிராம் அமோனியா, 9 வோட்டர் ஜெல் குச்சிகள் உள்ளிட்ட பொருட்களுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 46 வயதுடைய கலேவெல பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# யுவதி உட்பட நான்கு பேர் ஹெரோயினுடன் கைது!

கொழும்பு, நவ. 27

போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களின்போது யுவதி ஒருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகேகொட நகரில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 160 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 45 வயதுடைய மீகொட பகுதியைச் சேர்ந்நத நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பொலிஸ் பிரிவில் 05 கிராம் 120 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 29 வயதுடைய பாணந்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 26 வயதுடைய யுவதி ஒருவர் 04 கிராம 260 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேனமுல்லைப் பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 02 கிராம் 710 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 57 வயதுடைய கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# பெண் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்கள் அபிவிருத்தியில் ஆர்வம் காட்ட வேண்டும்

## முன்னாள் எம்.பி. திலகராஜ் கோரிக்கை

கொழும்பு, நவ. 27

"உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு எனும் 2018ஆம் ஆண்டு முதலான ஏற்பாடு நடைமுறைக்கு வந்ததை அடுத்து இலங்கையின் உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. அந்தத் தெரிவு முறையில் குறைபாடுகள் உள்ள போதும் பெண்கள் தமது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்த இந்த ஏற்பாடு வாய்ப்பாக அமைந் துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பௌதீக அபிவிருத்தி விடயங்களைக் காட்டிலும் உள்ளூர் மட் டத்தில் சமூக அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் பெண் உறுப்பினர்கள் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும்."

- இவ்வாறு முன்னாள் நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான எம். திலகராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஆண் உறுப்பினர்கள் பௌதிக அபிவிருத் தியிலேயே அதிகம் கவனம் செலுத்துகின்றனர். அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்கார்ர்களாகவே அவர்களில் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் அல்லது ஒப் பந்தக்காரர்கள் பலர் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ளனர். பெண் உறுப்பினர்களும் பாதை அபிவிருத்தி போன்ற விடயங்களில் கவனம் செலுத்தும்போது ஆண் உறுப்பினர்களுடன் முட்டி மோதி முரண்படும் போட்டி சூழல் ஒன்று நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேநேரம் சமூகம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெண் உள்ளூராட்சி சபை உறுப் பினர்கள் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாக பெண்கள், சிறுவர் கள் குறித்தான விடயங்களில் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும்" - என்றார்.

(இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- காதலர் தினம்
04.30 மணி : காட்டுன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை
07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



**இரவு**
07.30 மணி: மனிதனின் மறுபக்கம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு